விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 புரட்டாதி 5 ஜுலகஜ் 3 இதழ் 220

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21—9—82

ஜனாதிபதி தேர்தல்:

# வாகனங்கள் மூலம் பிரசாரம் தடை!

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல்தொடர்பாக பிரசாரம் செய்யவோ, பேச்சுக்களைநிகழ்த்தவோவாகனங்களில் ஒலிபெருக்கியை பயன்படுத்தக்கூடாதென்று சகல கட்சிஅமைப்பாளர்களுக்கும் பொலிசார்அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் கூட்டம் நடைபெறும் இடம், திகதி, பேசவிருப்பவர்களின் பெயர்கள் ஆகியவற்றை மட்டுமே வாகனங்களிலுள்ள ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பவேண்டுமென்றும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இவை மீறப்பட்டால் வாகனங்களில் ஒலிபெருக்கியைப் பாவிப்பதற்கான உத்தரவுப் பத்திரம் பொலிசாரினால்ரத்து செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக 22 தேர்தல் மாவட்ட கட்சி அமைப்பாளர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

## இந்திய விண்வெளி வீரர்கள் ரஷ்யாவில் பயிற்சி

மாஸ்கோ, செப். 20

இந்தியா – ரஷ்யா கூட்டு விண்வெளி பயணத்திற்காக இந்திய விண்வெளி வீரர்கள் இருவர் சோவிய யூனியனில் பயிற்சி பெறவுள்ளனர். [வெ]

# வட்டுக்கோட்டை எம். பி. யாக குட்டிமணி?

## கூட்டணி நியமனக்குழு இன்று அறிவிக்கும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக 'குட்டிமணி' என அழைக்கப்படும் யோகச்சந்திரன் நியமிக்கப்படுவது இப்பொழுது உறுதியாகிவிட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரியவருகிறது.

இன்று கூடும்தேர்தல் நியமனக்குழு, வட்டுக்கோட்டை தொகுதியின் புதிய எம்.பி.யாககுட்டிமணியைத் தெரிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை எம் பி. யாக குட்டிமணியை நியமிச்குமாறு பரவலாகக் கோரிக்கை விடப்பட்டதும்; தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த வாரம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில்; "குட்டிமணியை வட்டுக்கோட்டை எம். பி. யாக நியமிக்க வேண்டும் என்று இளைஞர்கள் விடுத்த கோரிக்கை கூட்டணியின் பரிசீலனையில் உள்ளது" என்று தெரிவித்திருந்ததும் அறிந்ததே.

(8ம் பக்கம் பார்க்க)

## குப்பிளானுக்கு வந்த கழுகு தெஹிவளையில்

[யாழ்ப்பாணம்]

குப்பிளானில் ஏராளமானவர்களின் கவனத்தை ஈர்த்த கழுகுப் பறவை ஒன்று, தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது!

குப்பிளான் கிராமத்துக்கு வந்து சேர்ந்த இந்தக் கழுகு பிடிக்கப்பட்டு, அங்கு வைக்கப் பட்டிருந்தது!

வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. செபாநாயகம் இந்தக் கழுகை தெஹிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு அனுப்பிவைக்கும்படி பணித்தார். கிராம சேவை அலுவலர் திரு. ந. சண்முகலிங்கம் இந்தக் கழுகை ரயில் மூலம் அனுப்பி வைத்தார்.

## ரூ.60,000 நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பகுதியில் நடைபெற்ற கலவரம் தொடர்பாக சேதமடைந்த மோட்டார் சைக்கிள் கராஜ் ஜுக்கும்மற்றும்கட்டிடங்கள், மோட்டார், சைக்கிள்களுக்

[8ம் பக்கம் பார்க்க]

## பாலஸ்தீனிய அகதிகள் படுகொலை!

### உலகநாடுகள் கண்டனம்

பெய்ருட், செப். 20

பெய்ருட்டிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்த பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்துள்ளமையை இந்தியா, பிரிட்டன், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமித்ததின் விளைவே இப்படுகொலையாகுமென்றும் இந்நாடுகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து இஸ்ரேலியத் தலைவர்களுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதற்கு ஆதாரங்களுண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெய்ருட்டிலுள்ள இரு பாலஸ்தீனிய அகதிகள் முகாம்களில் சுமார் 1400 பேர் இஸ்ரேலியப்படைகளினால் படுகொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

கள்ள நோட்டு விவகாரம்:

## லொறி சிக்கியது!

### சாரதி, கிளீனர் கைது!!

[மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்]

காத்தான்குடியில் கண்டுபிடிக்கப்பட்ட கள்ள நோட்டுகள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸ் கோஷ்டியினர், குளியாப்பிட்டியைச் சேர்ந்த லொறியைக் கைப்பற்றியுள்ளதுடன், லொறிச் சாரதியையும், கிளினரையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

காத்தான்குடியில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர் ஒருவரிடம் குளியாப்பிட்டி வர்த்தகர் ஒருவர் 46 ஆயிரம் ரூபா பணத்தைச் செலுத்தி 145 மூடை நெல்லை லொறியில் ஏற்றிச் சென்றுராம். அடுத்த நாள் காலை பண நோட்டுக்களில் 42,000 ரூபா கள்ள நோட்டுக்கள் இருப்பது தெரியவந்ததாம்.

இக்கள்ளநோட்டு விவகாரம் சம்பந்தமாக மட்டக்களப்புப்

[8ம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்றத் தேர்தலையும் கூட்டணி பகிஷ்கரிக்குமா?

### குமார் பொன்னம்பலம் கேட்கிருர்

[யாழ்ப்பாணம்]

"இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற மாட்டோம் என்று கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அடுத்துவரும் இலங்கை பாராளுமன்றத் தேர்தலையும் பகிஷ்கரிப்போம் என்ற உத்தரவாதத்தைத் தமிழ் பேசும் இனத்துக்கு அளிக்கத் தயாராகவுள்ளார்களா?"

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் முடிவு குறித்து திரு, குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில்: "இலங்கை ஜனாதிபதித்தேர்தலில் பங்குபற்ற மாட்டோம் என்று கூறும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள், தென்னுபிரிக்கச் சட்டத்திலும் கொடூரமான சட்டங்களான பயங்கரவாதச் சட்டம் போன்ற சட்டங்களை ஆக்கித்தமிழ்பேசும் இனத்தை நசுக்கும் இலங்கை பாராளுமன்றத்திலும் அதனுல் உருவாக்கப்பட்ட சபைகளிலும் தொடர்ந்து அங்கம் வகிப்பதேன்?" என்றும் கேட்டுள்ளார்.

திரு. பொன்னம்பலம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

(8-ம் பக்கம் பார்க்க)

## மூன்றும் நாள் உண்ணுவிரதம்

(கொழும்பு)

இத்தாலி விமானத்தைக் கடத்தியவரான சேபாலா எக்கநாயக்கா இத்தாலியிலிருக்கும் தனது மகனைத்தன்னிடம் ஒப்படைக்கக்கோரிமூன்ருவது நாளாக சிறையில் உண்ணுவிரதம் இருக்கிருர். (இ)

## அமைச்சரவை பதவியேற்பு

புதுடில்லி, செப். 20

ஆந்திரா பிரதேசத்தில்திரு. விஜய பாஸ்கரர் ரெட்டி தலைமையிலான புதிய அமைச்சரவை இன்று பதவியேற்றது. [வெ]

யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது

ஹோட்டல் றெலெக்ஸ்

தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ் வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி வகைகளுக்கும் யாழ்.நகரில் சிறந்து விளங்கும் ஸ்தாபனம்

HOTEL ROLEX

340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்

4559

# விளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்களுக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
4563

யாழ்ப்பாணம் நம் 44 கஸ்தூரியார் வீதியில் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4574 மே/பா ''ஈழநாடு'' லிமிட் யாழ்ப்பாணம். 4574

கண்டிவீதி சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கருகாமையில் வீட்டுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு. தொலைபேசி வசதியுமுண்டு. தொடர்பு: செ. யோகரத்தினம், நாதன் ஸ்ரோஸ், சாவகச்சேரி.
(4594)

## வகுப்பு

வெளிநாடு செல்பவர்களுக்கு அரியசந்தர்ப்பம். நவீனமுறையில் ஒரே மாதத்தில் ஆங்கிலம் பேச, வாசிக்க, எழுத இருபாலாரும் கற்கலாம். முழுநேர வகுப்புக்கள். முன் அனுபவம் தேவையில்லை. மற்றும் மூன்று மாத, ஆறுமாத, சனி, ஞாயிறு வகுப்புக்கள். G. C. E. [O/L] மார்கழி 1982 பரீட்சைக்கு ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற தனிவகுப்புக்கள். நேரில் வரவும். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 25-09-82. The School of Computer Studies. 52/1, கனகரத்தினம் பில்டிங், (வீனஸ்றெக்கோடிங்பார் மேல் மாடியில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4595

சுன்னுகம்
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
சுன்னுகம்

## அறிவித்தல்

சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1000ற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், பழுதடைந்த வெற்றுப் பரல்களும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம் ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 28-9-82 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்,
18-9-1982. (4590)

## ப. நோ. கூ. ச. தேர்தல் ஒத்திவைப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்ட பல நோ. கூ. சங்கங்களின் கிளைகளுக்கான குழுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். தில்லைநடராசா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் அண்மையில் நடைபெறவுள்ளதாலேயே இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ''நாட்டின் எதிர்காலம் இளைஞர் கையிலேயே தங்கியுள்ளது''

[துணுக்காய்]

''ஒரு நாடு சகலதுறைகளிலும் வளம்பெற்று எதிர்காலம் சிறக்க வேண்டுமானால் அது அந்த நாட்டின் இளைஞர் கையிலேயே தங்கியுள்ளது. இதற்காகவே இலங்கை அரசும் தேசிய இளைஞர் சேவைமன்றத்தை ஆரம்பித்து இளைஞர்களைச் சேவையில் ஊக்குவித்து வருகின்றது.''

இவ்வாறு துணுக்காய்ப் பகுதித் தேசிய சேவைமன்ற அலுவலர் திரு. கு. தவகுலசிங்கம் துணுக்காயில் கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டார்.

துணுக்காய் தேசிய இளைஞர் சேவை மன்றம் இந்தக் கருத்தரங்கை நடாத்தியது. இக்கருத்தரங்கிற்கு துணுக்காய் கிராமோதயசபைத் தலைவர் திரு. ப. மயில்வாகனம் தலைமை வகித்தார். துணுக்காய் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50 இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டனர். துணுக்காய் இளைஞர் மன்றத்தலைவர் செல்வி சி. ஜெயந்தினி நிஸ்கோஸ் ஸ்தாபனத்தின் அமைப்பு முறைகளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறினர்.

இளைஞர்மன்ற அலுவலர் மேலும் பேசுகையில், இம்மன்றம் மொழி, இனம், மதம், பால் வேறுபாடின்றி எல்லா இளைஞர்களையும் வழிநடத்திச் செல்வதுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் அவர்களை அனுப்பிச் சிரமதான வைபவங்களில் ஈடுபடுத்தி பல இன மக்களிடையே இன ஐக்கியத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இளைஞர்கள் எதிர்காலத்தில் ஏதாவதொரு தொழிலைச் செய்து வாழ்க்கையில் ஈடுபடுத்தவும் இந்தமன்றம் உதவிபுரிந்து வருகின்றது.'' (அ)

## மறவன்புலோ மேற்கு ச.ச.நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ மேற்கு சன சமூக நிலையப் புனரமைப்புப் பொதுக்கூட்டம் சன சமூக நிலையங்களின் பொறுப்பதிகாரி திரு. எஸ் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விசேட சேவை உத்தியோகத்தர் திரு.ரி.மகாலிங்கமும் பங்குகொண்டார்.

நிலையத்தின் நிர்வாகசபையில் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. கந்தசாமி, உப-தலைவர் திரு. செ. பேரின்பநாயகம், செயலாளர் திரு. செ. பஞ்சலிங்கம், உப-செயலாளர் திரு இ. சிவபாதம், பொருளாளர் திரு. நா. நாகராசா, உப-பொருளாளர் திரு. நா. பொன்னுத்துரை, பத்திராதிபர் செல்வி க.சிவலோகநாயகி, உப பத்திராதிபர் செல்வி க. கோமளாதேவி, எண்பார்வையாளர்; திரு.செ.கந்தையா.

## தெரிவு

[மன்னார்]

மன்னார் மாவட்ட கிராமோதய சபைத்தலைவர்கள் சங்கத்தின் தலைவராக தாராபுரம் கிராமோதய சபைத்தலைவர் ஜனாப். கே. எம். அப்துல்காதர் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தாராபுரப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், தாராபுரம் ஓ. பி. ஏ சனசமூக நிலையத் தலைவராகவும், தாரபுரம் சமூகநலகழக அமைப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். (க)

# பிஸ்கால் ஏல விற்பனவு

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல; எம்/301
தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்

எதிராக
சுப்பையா நவரத்தினம்,
வசாவிளான் தெற்கு, வசாவிளான். (காலமானார்)
அனுதி எதிர்வாதி

1. செல்லப்பா இராசரத்தினமும்
2. பெண் பூமலரும்
3. நவரத்தினம் மகன் ஜனார்த்தனன் (பராயமற்றவர்) எல்லோரும் குப்பிளான் கிழக்கு, ஏழாலை.

இதில் 2-ம், 3-ம் எதிர்வாதிகள் காலம்சென்ற சுப்பையா நவரத்தினத்தின் பிரதிநிதிகளென்ற முறையிலும் 3-ம் எதிர்வாதி பராயமற்றவரென்ற படியாலும் இவரின் வழக்குக்கான பாதுகாவலர் 1-ம் எதிர்வாதி.

பதில் எதிர்வாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எம்/301 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந் திகதி (28-10-82) வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 7821/73 ஏழாயிரத்து எண்ணூற்றி இருபத்தொரு ரூபாய் எழுபத்துமூன்று சதம் இன்னும மனுதாரால் விற்பனவுத் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும் மேலதிகத் தொகையும் வழக்குச்செலவும்.

சு. வ. கணேசன்,
பிஸ்கால்,
மாவட்ட மன்று, மல்லாகம்,
15-9-82.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று வசாவிளான் இறைசரம்பக்கடவை உ இப்படி நிலப்பரப்பு மூன்றும் (நில. பர.3) ஆனல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந. தம்பு என்பவரால் 1964-9-4-ந் திகதி 1566-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவு படத்தின்படி நிலப்பரப்பு இரண்டு குளி எட்டுடன் எட்டில் ஐந்தும் (நில. ர. 2 குளி 8,5/8) வீடும் எல்லை கிழக்கு இளையதம்பி கைம்பெண் குஞ்சரத்துக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கையும், கந்தையா பெண் பொன்னுப்பிள்ளைக்கும் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள், மேற்கு கந்தையா பெண் நவமணிக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள், தெற்கு தங்கம் அல்லது தங்கரட்ணத்துக்குரியவாதனம் இதடங்கலும் வடக்கேயிருக்கும் கிராமச்சங்க ஒழுங்கைக்கு இக்காணியிலிருந்து போக்குவரவு செய்யும் ஓர் ஒழுங்கையும். (4591)

# மன்னார் பனம்பொருள் உற்பத்தி பயிற்சிநிலையம் மூடப்படும்?

(மன்னார்)

மன்னார்ப் பட்டினத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பனம் பொருள் உற்பத்திப் பயிற்சிநிலையத்தில் பயிற்சி பெறும் மாதர்களின் தொகை குறைந்துள்ளதால் இந் நிலையத்தை மூடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது,

இப்பயிற்சி நிலையத்தில் ஆறு பெண்களேபயிற்சிபெற்று வருகின்றனர். ஆறு பயிற்சியாளர்களுக்கு ஒரு ஆசிரியையை நியமிப்பது முடியாத செயலாகும். இதனாலேயேமன்னார் பட்டினத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பயிற்சி நிலையம் மூடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 5ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(21—9—82)

மேடம்: உள்ளத்தில் உவகை கூத்து. உறவினர்கள் வருகை வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். எதிலும் தூய்மையைக் காண விரும்புவீர்கள்.

இடபம்: முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடன்படவும்நேரிடலாம். நண்பர்களால் நஷ்டமடைய இடமுண்டு.

மிதுனம்: உறவு முறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வார்கள். வாழ்த்தும் உண்டாகும்.

கடகம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும். கற்றதனால் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும். செய் தொழிலில் புதிய உத்திகளைக் கையாளுவீர்கள் சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

சிங்கம்: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்கு கிடைக்கலாம். திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடும். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல்உண்டு.

கன்னி: இன்னலில் பின்னலால் வேதனைப்படுவீர்கள். நீண்டகாலத்தொடர்பொன்று இன்று துண்டிக்கப்படலாம். அவசர முடிவுக்கு வராது நன்ருக சிந்தித்த பின்பே செயலாற்றவும்.

துலாம்: பண விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். தொழில் துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். எந்த விடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும். நாவடக்கம் மிகவும் விரும்பத்தக்கது.

விருச்சிகம்: இல்லத்தில்இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்றுநிவர்த்தியாகும் தானிய விருத்திக்கும் இடமுண்டு.

தனு; எதிலும் அவசர கோலம் தென்படும். சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எதிர்பார்த்த வரவுகள் தடைப்படக் கூடும். இளமை நினைவுகள் வேதனையைத்தரும்.

மகரம்; அறவழியில் நாட்டம் பிறக்கும். தாராளசிந்தை மேலிடும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்கு இன்று வழிகோலப்படலாம். மதிப்பு உயரும்.

கும்பம்: எண்ணியது எண்ணியபடி நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள். மக்கள் செல்வாக்கு மனதைக் குளிர வைக்கும். அதிர்ஷ்ட தினம்.

மீனம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 80-ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில்

# வேலையிழந்த அனைவருக்கும் மீண்டும் வேலை

(கரவெட்டி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து 80 ஆண்டு ஆடி மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் வேலை கிடைக்கப் பெற்றுள்ளது.

வேலை கிடைத்துள்ள பிரஸ்தாப ஊழியர்களில் சிலர் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

## ''இறைவனைச் சரணடைந்தால் துன்பத்திலிருந்து விடுபடலாம்''

\- தங்கம்மா அப்பாக்குட்டி

[மட்டுவில்]

''இறைவன் நமக்குச் சொந்தம். நாம் இறைவனுக்குச் சொந்தம். இந்த நம்பிக்கையே எமது வாழ்க்கையின் அடிப்படை இலட்சியமாக வேண்டும். இந்த நம்பிக்கை இருந்தால் நாம் என்றும் பலவீனர்களாக வேண்டியது கிடையாது. நாம் செய்யும் தொண்டுகள் அனைத்தையும் இறைவன் தொண்டாகக் கருதி செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பொழுது நான் என்னுடைய என்ற ஆணவ மலம் எம்மைச் சூழ முடியாது.''

இவ்வாறுபண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கல்வயல் ஸ்ரீ ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வசந்த மண்டப சங்கு ஸ்தாபன விழாவில் பேசும்போது கூறினர்.

''சிவநெறிப்புரவலர்'' திரு. க. கனகராசா சங்குஸ்தாபாபனம் செய்தார். நெசவுக் கைத்தொழில் அதிபர் திரு. சி. நவரத்தினம் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து தனது உரையில் ''இறைவன் ஒப்புயர்வற்றவன், அவனைச் சரணடையந்தாலன்றி, நாம் எமது துன்பதுயரங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது'' என்றார்.

# கொலையுண்டவர்களின் சடலங்களை அப்புறப்படுத்துகிறது ராணுவம்!

## இஸ்ரேலிய இராணுவ அதிகாரியே கொலைகளுக்கு பொறுப்பாம்!

பெய்ரூட்,செப்.20 மேற்கு பெய்ரூட்டிலுள்ள ஷதிலா, ஷப்ரா ஆகிய இரு பாலஸ்தீன முகாம்களில் கொலைசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பாலஸ்தீன மக்களின் சடலங்களை லெபனன் இராணுவமும், இங்குள்ள தொண்டர்களும் அப்புறப்படுத்துவதுவதில் இறங்கியுள்ளனர்,

இந்தமுகாம்களின் வெளியே கொலைசெய்யப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்த சடலங்கள் பல துண்டம், துண்டமாக வெட்டப்பட்டிருந்தன வென்று கூறப்பட்டது.

மேற்கு பெய்ரூட்டில் இக்கொலைகள் இடம் பெற்ற வேளை இப்பகுதிகளிலிருந்த இஸ்ரேலிய இராணுவம் தற்போது இங்கிருந்தும் புறப்பட்டு அருகிலுள்ள வேறொரு இடத்திற்கு நகர்ந்துள்ளது. இவ்விடத்தில் இஸ்ரேலிய இராணுவம் தனது நிலையைப் பலப்படுத்தியுள்ளதுடன் ஊரடங்குச் சட்டத்தையும் அமுல் செய்துள்ளது.

கொலைகள் இடம்பெற்ற முகாம்களுக்குச் சென்ற பத்திரிகையாளர்களிடம் அங்கிருந்தவர்கள் இஸ்ரேலிய இராணுவ அதிகாரியொருவரின் பெயரைக்கூறி அவரே இச்சம்பவத்துக்குப் பொறுப்பானவர் எனக் குற்றஞ்சாட்டினர். (கி)

## லெபனனிலிருந்து இஸ்ரேலியப் படைகள் படிப் படியாகவே வெளியேறுமாம்!

### இஸ்ரேல் அமைச்சரவை அறிவிப்பு

ரெல்அவிவ்,செப் 20 மேற்கு பெய்ரூட்டினுள் தங்கியிருக்கும் இஸ்ரேலியப் படைகள் அங்கிருந்தும் படிப்படியாக வெளியேறும் என்று இஸ்ரேலிய அமைச்சரவை அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை இஸ்ரேலிய பிரதமமந்திரி திரு. மெனச்சம் பெகினுடைய இல்லத்தில் அவசரமாக நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டமொன்றிலேயே இஸ்ரேலியப் படைகளின் வெளியேற்றம் குறித்து மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது

நேற்றையதினம் ரெல் அவிவ், ஜெருசலம் ஆகிய இஸ்ரேலின் முக்கிய நகரங்களில் இஸ்ரேலிய மக்கள் மேற்கு பெய்ரூட் கொலைகள் குறித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். சுமார் 50 ஆர்ப்பாட்டக்காரர்கள் ரெல்அவிவில் கைது செய்யப்பட்டனர். பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க கண்ணீர்ப் புகைப்பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இது இவ்வாறிருக்க உலக நாடுகள் மேற்குப் பெய்ரூட் படுகொலைகள் குறித்து தொடர்ந்தும் தமது கண்டனங்களைத் தெரிவித்த வண்ணம் இருக்கின்றன.

பாதுகாப்புச் சபையைக் கூட்டி லெபனன் நெருக்கடியில் தலையிடுமாறும் ஐ. நா. ஸ்தாபனத்தை பலநாடுகள் கேட்டுவருகின்றன. இரு வாரங்களுக்கு முன்னர் மேற்கு பெய்ருட்டில் பாலஸ்தீன கொரிலாக்களின் வெளியேற்றத்தை மேற்பார்வையிட அங்கு தமது படைகளை அனுப்பிவைத்த பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் மீண்டும் தமது படைகளை அங்கு அனுப்ப ஆர்வங்காட்டுகின்றன. [கி]

## ஒலிம்பிக்கில் பங்குபற்ற நிதி உதவி

லண்டன், செப். 20 ஆசிய நாட்டு வீரர்கள் பலர் போதியளவு பொருளாதார வசதியின்மை காரணமாக ஒலிம்பிக் பந்தயங்களில் பங்குபற்றமுடியாத நிலை தொடர்ந்தும் நீடிக்காதென்று, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவரான திரு. யுவான் அந்தோனியா சமராஞ் தெரிவித்துள்ளார்.

லாஸ் ஏஞ்சலிஸ்ஸில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் பந்தயங்களின் போது அந்நகரில் தங்கியிருந்து பந்தயங்களில் பங்கேற்குமளவிற்குத் தமது நாட்டு விளையாட்டு வீரர்களை அனுப்ப பொருளாதார நிலை இடந்தரவில்லை என்று தாய்லாந்து நாட்டின் ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் முறையிட்டிருந்தது. இந்த முறையீட்டிற்குப் பதிலளிக்கும்வகையிலேயே சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார வசதிகுறைவால் ஒலிம்பிக்கில் பங்குபற்ற முடியாத நாடுகளுக்கென்று 40 லட்சம் அமெரிக்க டாலர்கள் ஒதுக்கப்படுமென்றும் அவர் உறுதியளித்துள்ளார். (கி)

## இந்திய வீரர்கள் விண்வெளி பயணத்துக்கு தெரிவு

புதுடில்லி, செப் 20 இந்திய விமானப்படையைச் சேர்ந்த இரு விமானிகள் விண்வெளிப்பயணத்துக்கான பயிற்சி பெறுவதற்கு தெரிவாகியுள்ளனர்.

சோவியத்யூனியனிலே இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் ஸ்குவாடன் லீடர்சர்மா, விங்கமாண்டர் மல்ஹோத்ரா ஆகிய இரு விமானிகளுமே தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்

இவ்விருவரும் 1984ல் சோவியத் விண்வெளிவீரர்களுடன் விண்வெளிப்பயணத்தை மேற்கொள்ளும் முதலாவது விண்வெளிவீரர்களாக விளங்குவார்கள்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சோவியத் பயணமாவதற்கு சிறிதுநேரத்திற்கு முன்னரே இவ்விரு வீரர்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து அறிவித்தார். [கி]

பட்மின்டன்

## உலகக் கிண்ணத்தை இந்தோனேசியா வென்றது!

கோலாம்பூர், செப் 20 இரண்டாவது உலக்கக்கிண்ணத்துக்கான பட்மிட்டன்ட் போட்டியில் இதோனேஷியா வெற்றி பெற்றுள்ளது.

கோலாம்பூரில் நடைபெற்று வந்த உலகக் கிண்ண பட்மிட்டன்ட் போட்டிகளில் திரு. லிம்ஸ்வீகிங் என்ற இந்தோனேஷிய வீரரே வெற்றி பெற்றவராவார். இவருடன் மலேசிய வீரரொருவரே இறுதிப் போட்டியில் மோதினர்.

இந்திய வீரரான பிரகாஷ் படுகோனே இறுதிவரை முன்னணியில் திகழ்ந்த போதிலும் சீன வீரரொருவரிடம் இவர் தோல்யடைந்தார். (கி)

## கடத்தல் பொருட்கள் சிக்கின

சென்னை செப்.20

தூத்துக்குடிக்கு அருகிலுள்ள இடமொன்றில் இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட நான்கு லட்சம் பெறுமதியான கடத்தல் பொருட்களை இயந்திரப் படகொன்றிலிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இப்படகு கைப்பற்றப்பட்ட வேளை அதிலிருந்த இருவர் தப்பியோடிவிட்டனர். தூத்துக்குடியில் வேறொரு இடத்தில் இவ்வாறே நான்கு லட்சம் பெறுமதியான கடத்தல் பொருட்கள் பறிமுதலாகின. இவ்வேட்டையில் நான்கு பேர் சிக்கிக்கொண்டர். (கி)

## இந்தியப் பிரதமர் இந்திரா சோவியத் பயணமானர்

புதுடில்லி, செப். 20 சோவியத் யூனியனுக்கு ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று காலை புதுடில்லியிலிருந்து மாஸ்கோ பயணமானர்.

இவரை இந்திய அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர்களும், உயரதிகாரிகளும் விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்தனர்.

தமது சோவியத் விஜயம் பற்றி திருமதி காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இந்த விஜயம் இவ்விரு நாடுகளுக்கிடையே நிலவும் நட்புறவின் அம்சமென்றும், அணு ஆயுத பாவனை மற்றும் வல்லரசுகளின் ஆயுதப் போட்டி ஆகியனவற்றைக் குறைவடையச் செய்வது குறித்தும் தாம் சோவியத் தலைவர்களுடன் உரையாடுவார் என்றும் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோ போய்ச் சேரும் பிரதமர் காந்திக்கு சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் இன்றிரவு இராப்போசன விருந்தொன்றை அளித்துக் கௌரவிப்பார்.

லெனின் நினைவு நிலையம் உட்பட சோவியத்தின் முக்கியம்வாய்ந்த இடங்களையும் பார்வையிடவிருக்கும் திருமதி காந்தி மாஸ்கோவுக்கு அண்மையில் அமைந்துள்ள விண்வெளி வீரர்களுக்கு விண்வெளியில் சஞ்சரிப்பதற்கான பயிற்சிகளை வழங்கும் 'ஸ்டார்' நகரத்திற்கும் பயணஞ்செய்வார்.

இந்தியப் பிரதமரின் சோவியத் விஜயத்துக்கு, சோவியத் பத்திரிகையான 'பிராவ்தா' அதிகமுக்கியத்துவம் கொடுத்துள்ளது. (கி)

## பெரியகுளத்தில் கட்சி தலைவர்கள் முகாம்

### பிரசாரங்கள் சூடுபிடிக்கின்றன!

சென்னை, செப். 20 பெரியகுளம் தேர்தல்தொகுதியில் லோக்சபா உபதேர்தல் நெருங்கிவருவதையிட்டு இத்தொகுதியில் இந்தியி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் முகாமிடத் தொடங்கியுள்ளனர்.

தமிழக முதலமைச்சரும் அ. தி. மு. க. தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி ஆகியோருட்பட தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம், மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சரான திரு. வெங்கட்ராமன் ஆகியோர் இத்தேர்தல் தொகுதியில் தங்கியிருந்து பிரசார வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திரு. நாராயணசாமிநாயுடு தலைமையிலான விவசாயிகள் கட்சியும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. மொத்தமாப் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 25 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

பெரியகுளம் லோக்சபா உபதேர்தல் பிரசார வேலைகளை அவதானித்த பத்திரிகையாளரொருவர் இத்தேர்தல், இதில் போட்டியிடும் கட்சிகளின் கௌரவப் பிரச்னையாகஅமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (கி)

## "எமதுசேவை மக்களுக்கு பயன்படவேண்டும்"

(புலோலி)

"எமது சேவை பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் மக்களின் ஊழியர்கள் என்பதை மனதில் கொண்டு செயற்படுத்துவதனமூலம் இதனைச் சாதிக்கலாம்'' என்று யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் நெல்லியடி உபஅலுவலக அதிகாரமளிக்கம்பட்ட அலுவலர் திரு. வ இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

அலுவலகத்தில் பிரதம லிகிதராகக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. எம். அருளானந்தத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைவவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. இராமச்சந்திரன் தொடர்ந்து பேசுகையில், 'இடமாற்றலாகிச் செல்லும் திரு. அருளானந்தம் இதர ஊழியர்களுக்கு முன்மாதிரியாகத் திகழுகின்றுர், நாம் மட்டுமல்ல இந்நாட்டின் எந்தப் பாகத்திலும் உள்ளமக்கள் அவரது சேவையைப் பெற வேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் பணியாற்றினல் நாம் வகிக்கும் பதவிகளும் பெருமைபெறும்''

திரு. எம். அருளானந்தம் தனக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் ஊழியர்கள் ஒற்றுமையுடன் திகழ்ந்தாலே ஒரு அலுவலகம் சுமூகமாக இயங்க முடியும் என்று கூறினர்.

## சுவீடனில் பொதுத்தேர்தல்

ஒஸ்லோ, செப். 20 சுவீடனில் நடைபெற்று வரும் பொதுத்தேர்தலில் திரு. ஒலர் பாமேயின் தலைமையிலான சோஷலிச ஜனநாயகக் கட்சி வெற்றிபெறும் அறிகுறிகள் தென்படுகின்றனவென்று கம்யூட்டரின் கணிப்பீடுகள் வெளிக்காட்டுகின்றன.

369 ஆசனங்களைக் கொண்ட சுவீடன் பாராளுமன்றத்தில் இக்கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றுமென்றும், ஆளுங்கட்சி 163 ஆசனங்களைப் பெறுமென்றும் கம்யூனிஸ்ட்கட்சி 20 ஆசனங்களைப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [கி]

## மணிவாக்கு

''இடையருத சாதனைதான் வெற்றிக்கு வழிஆவது. காமர்ப்புகுரில் தச்ச குடும்பத்தைச் சேர்ந்த மாதர் உரலில் அவல் இடிப்பதைப் பார்த்துள்ளேன். உலக்கை கைவிரல்களை நசுக்கும் என்ற அச்சம் இருந்தபோதும், அவர்கள் குழந்தைகளுக்கும் பால் கொடுத்துக்கொண்டும் அவல் விலை கூறிக்கொண்டும் இருப்பர்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

## அவசர தேவை - அமைதி

சண்டையும், சச்சரவும் மனிதர்மனதிலேயேஜெனிக்கின்றன. சமூகத்தில்வாழும் மனிதன் சமாதானமாக வாழ வேண்டுமானுல் தன் மனத்திலே அமைதி காண்பது முதற்கடமை.

இந்த அமைதியில்லாத நிலையை உலகெங்கிலும் இன்று காண்கின்றோம். மத்திய கிழக்கில் ஆயிரக் கணக்கான பெண்களும், பிள்ளைகளும் அகதிகள்முகாமிலேயே ஒருங்கு கொல்லப் பட்டனர். ஒரு நாட்டின் ஜனுதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் பதவியேற்க முந்தியே குண்டுக்கிரையாகினர்.

இவை கடந்த வாரம் நடைபெற்ற கோரச் சம்பவங்கள்; இவற்றைப்போல் நூற்றுக் கணக்கான வன் செயல்கள் உலக அரங்கில் தினமும் நடைபெறுகின்றன.

பண்டைய காலம்போல் அதெல்லாம் வேறெங்கோவென்று நாம் அசட்டை செய்துவிடமுடியாது

உலகின் எந்தமூலையிலும் இடம்பெறும் புதுப்புது உபாயங்கள், கொலைகொள்ளைக்குரிய புதுவித கண்டு பிடிப்புகள், எங்கள் நாட்டுக்குள் வருவதற்கு அதிக காலம் எடுக்காது. சினிமா மூலம் மட்டும்; அதிலும் வேகமான வழிகள் பலஉள,

இந்த உண்மையை இங்கு அதிகரிக்கும் கொலை,கொள்ளைகளிலிருந்தே நாம்யூகிக்க முடிகின்றது. எவ்வாறு தீய செய்தி, நல்ல செய்தியிலும் பார்க்க மிக வேகமாகப்பரவுகின்றதோ, அதேபோல் அழிக்கும் சக்திகள், ஆக்கும் சக்திகளிலும் பார்க்க விரைவில் பரவுகின்றன. வேரூன்றிச் செயற்படுகின்றன.

காற்றும் வாய்ப்பாகவிருந்தால் ஒரு சின்னப் பொறி ஒரு நகரத்தை அழித்துவிடுகிறது.

தேர்தல்காலம் புயலடிக்கும் காலமென்பது கடந்த கால அனுபவம். தேர்தல் என்று சொல்லும்போது தேர்தலுக்கு முன்னும்,தேர்தலுக்கு பின்னும் எக்கட்சி வெற்றிபெற்ருலென்ன அப்பாவி மக்களை அடித்தும், பறித்தும் கொலை செய்தும் துன்புறுத்தும் வழக்கம் புத்தபிரானின்புனிதபாதம் கண்ட இம்மண்ணில் ஒரு பழக்கமாகி வருகிறது'

இன்று 'புகை பறக்கும' ளவில் நடைபெறும் ஜனுதிபதி தேர்தல் பிரசாரம் கட்டுப்பட்டு மிக அமைதியாக நடக்கவேண்டும்;தேர்தல் தினம் கிட்டுமளவில் மக்கள் உணர்ச்சிவசப்பட்டு தீவிர செயல்களில் மனஞ் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்; தேர்தல் தினம் மிக அமைதியாகவும்,ஒழுங்காகவும் அமையவேண்டும்; தேர்தல் முடிந்ததும் முடிவு எவ்வாருயினும் போட்டியில் ஏற்படும் பிணக்கும் ஆத்திரமும் வீட்டுக்குள் கட்டுப்பட்டிருக்கவேண்டும் நாம் இடும் பணிகள் மிக அசாத்தியமானதுபோலிருக்கும்; ஆனுல் அவற்றுள் எதுவும் மீறப்பட்டால் நாடு நல்வாழ்வு காண்பது கடினமாகும். நாகரிக நாடு என்ற பேருக்கு இன்றிருக்கும் அபாயம் நிரந்தரமாய் விடும்.

மிகப் பெருஞ் செலவில் நடத்தப்படும் இத்தேர்தல்கள் ஒழுங்காக நடத்தப்படாவிட்டால் முடிவுபாதிக்கப்படுவதோடு மக்கள் மன அமைதி இழந்த நிலையில் நெடுங்காலம் கழிக்க நேரிடும். எனவே இதற்குச் செலவிடும்தொகை விழலுக்கிறைத்த நீராகும்.

அண்டை நாடுகளை ஒப்பிடுமளவில், நாம் அதிகம் கவலைப்படுதற் கிடமில்லை, இருப்பினும் மத்தியகிழக்கு நாடுகளில்சாதாரணமெனக் கொள்ளப்படும் பயங்கர வாதம் இங்கும் பரவி வருவதை நாம் கட்டுப்படுத்த முன்வரவேண்டும். மனித உயிருக்கு மதிப்பளிக்கும் எமது அடிப்படைப் பண்பு எவ்வகையிலும் பேணப்பட வேண்டும்.

பொலிஸாரும் அரசாங்கமும் இந்தப்பெரும்பொறுப்பைத்தாமே சமாளித்துவிட முடியாது. கடந்த பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் புதிய ஆட்சி தமிழ் மக்களுக்கு நேரிட்ட வன்செயல்களையும், கலவரத்தையும் உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாதநிலையில் தத்தளித்ததை எவரும்மறந்து விடமாட்டார்.

இவ்வித அமைதியீனத்துக்கு இலக்காகின்றவர்கள் தமிழ்மக்கள், மலையக மக்கள் என்பது இந்தநாட்டு மக்களுக்கே ஒருசாபக்கேடாகும். இதனை இன்று உணரத்தவறினுல் வேறென்று?

உலக அரங்கின் மதிப்பை நாம் பொருட்படுத்தாது, அரசியல் கட்சிகள் அரசின் செல்வாக்குடன் பொறுப்பற்ற முறையில் காடைத்தனத்தை ஏவிவிடும் காரணத்தால் இவ்வித கலவரங்கள் ஒழுங்காக நடைபெற்று வந்தன.

இவற்றை வேரோடு களைந்துவிட மக்கள் தலைவர்கள், கட்சிப்பிரமுகர்கள் பொதுநலம் கருதும் தேசாபிமானிகள் திடசங்கற்பம் செய்தே ஆகவேண்டும். இதில் வறுமைநிலை முற்ருக நீக்கப்படவேண்டும்.

பிரசாரத்தில் தீவிர சட்டங்களை அமுல்நடத்த அரசாங்கம் முன்வந்திருப்பது நல்லது. ஆனுல் தானே இட்ட சட்டத்துக்கமையும் பண்பின் சிறந்த எடுத்துக்காட்டாகவிருக்க வேண்டும் என்பதை நாம் வற்புறுத்துகின்றோம்.

கருத்து வேற்றுமைகளை மக்களுக்கு விளக்கும் சந்தர்ப்பம் வேட்பாளர்களுக்குத் தாராளமாகக்கிடைக்க வேண்டும், பகிரங்கக் கூட்டங்களில் மட்டுமல்ல, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சிச் சாதனங்களிலும் பாகுபாடு இருக்கப்படாது.

நியாயமான, நிதானமான கருத்துத் தெளிவில் தீர்ப்பளிக்கும் வாக்கே மக்கள் முடிவை வெளிப்படுத்தமுடியும்.

இதன் அவசர தேவை அமைதியென்பது வெள்ளிடை மலை.

---

### கூட்டுறவுத்துறையினர் அரசின்

# இறக்குமதிக்கொள்கையை முறியடிக்கவேண்டும்

## கூட்டுறவுச்சபை விழாவில் நல்லூர் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

''அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையினுல் கூட்டுறவுத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு நாங்கள் பரிகாரம் காண வேண்டுமானுல், பனம் பொருள் அபிவிருத்திசபை, வடபகுதியின் மூலவளமான பனம் பொருள்களிலிருந்துஉற்பத்தி செய்யும் பனம் சீனி போன்றவற்றைக் கொள் முதல் செய்து, இறக்குமதிக் கொள்கையை முறியடிக்க வேண்டும்''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாண மாவட்ட ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையினர் கொண்டாடிய கூட்டுறவு தின விழாவின் மூன்ரும் நாள் நிகழ்ச்சிகளை, குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், வலியுறுத்தினுர்.

மேற்படி சபையின் யாழ்ப்பாண மாவட்டக் குழுத் தலைவரும் கோப்பாய் எம். பியுமான திரு ஆ. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா யாழ்ப்பாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ். வேலாயுதபிள்ளை, இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை, தேசிய மகளிர்குழு உப தலைவி திருமதி சசிதேவி கந்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தையல், பேச்சு, கட்டுரை, கவிதை, கதை, கைவேலை, சங்கீதப்போட்டிகளும் இடம் பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாண கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு எஸ். ஜெயகாந்தன், மகளிர் பாவனையாளர் கல்வித் திட்டப்பணிப்பாளர் செல்வி ஜெயந்தா தென்னக்கோன், யாழ்ப்பாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு வே. நடராசா, வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு வி. எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அன்று நாடகம், அபிநயம், வண்டிச்சவாரிப் போட்டிகளும், மகளிர் குழுப் பட்டிமன்றமும் இடம்பெற்றன.

மூன்ரும்நாள் நிகழ்ச்சிகளில் பெண்களுக்கான ஐந்து மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, நீச்சல், கயிறிழுத்தல் போட்டிகளும் மாலை வாகன அலங்கார ஊர்திகளும் இடம் பெற்றன.

### பனம் பொருள்களும் கூ. சங்கங்களும்

மூன்ரும் நாள் விழாவில் திரு மு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது:

''தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை கூட்டுறவுத்துறைக்கு அரசியல்தலையீடில்லாமல் ஆதரவளித்து வருகிறது.

''தனியார் துறையினருடன் கூட்டுறவு இயக்கம் போட்டி போட முடியாது. தனியார் துறையினர் செய்யும் தில்லுமுல்லுகளுக்கும் கூட்டுறவுத் துறை ஈடுகொடுக்கவும் முடியாது. அரசாங்கம் அதன் கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் காண வேண்டும். இல்லையேல்கூட்டுறவுத் துறை அரசின் இறக்குமதிக் கொள்கையை முறியடிக்க வேண்டும்.

''வடபகுதியின் மூலவளமான பனம்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யும் பொருள்களை வடபகுதியிலுள்ள எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கி விற்பனை செய்கின்றன? பனம் பொருள் அபிவிருத்திசபை, பனம் பொருள்களிலிருந்து இன்று தரமான பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் சில பொருள்களுக்கு ஈடுகொடுக்கும் அளவுக்கு உற்பத்தி செய்கின்றன அவற்றை எமது கூட்டுறவுச் சங்கங்கள் அவசியம் கொள்முதல்செய்து விற்பனை செய்யவேண்டும். இதனுல் மேலும் உற்பத்தி பெருகுவதுடன், எமது வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதாரம் அபிவிருத்தியடையும்.

''வெங்காயம், மிளகாய் இறக்குமதியால் வடபகுதி விவசாயிகள் மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றை வடபகுதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் விவசாயிகளிடம் கொள்வனவு செய்து தென்னிலங்கைக்கு அனுப்பி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்''

யாழ்ப்பாண எம். பி. திரு வெ யோகேஸ்வரன், பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு க. நடராசா, யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு இராஜா விசுவநாதன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

திருமதி யோகேஸ்வரன் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கினுர்.

(மா—அ)

---

## மகாதேவா தாம்போதியும் மா. அபிவிருத்திசபையும்

'ஈழநாடு' 17-9-82 மட்டிட்டறிவன் மதியூகி என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளவிடயம் குறித்து விளக்கமளிக்க விரும்புகின்றேன்.

மகாதேவா தாம்போதி நிறைவேற்றுவதற்கு எந்த உறுப்பினரும் பின்னிற்கவில்லை உதாரணம்; கடந்த கால பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஒவ்வொரு லட்சம் ரூபா ஒதுக்கி வேலைகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் உள்ளூராட்சி மன்றங்களின் வரிப்பணத்திலிருந்து எட்டு லட்ச ரூபாவைச் செலவுசெய்ய அனுமதிக்குமாறு திட்டமிடல்பகுதியினரின் வேண்டுகோளைத் தலைவர் சபைக்குத் தெரிவித்தபொழுதுதான், இவ்விடயம் ஆரம்பமாகியது யாழ்.மாவட்ட அபிவிருத்திசபையில் ஐம்பத்திநாலு உள்ளூராட்சி மன்றங்களின்

## மக்கள் கருத்து

சோலைவரிப்பணம் மின்சாரவரிபணம், வேறுவரிப்பணங்களும் தற்போது மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு வந்திருப்பதால் அப்பகுதிகளின் அபிவிருத்திக்குத்தான் செலவிடப்படுவது முறை எத்தனையோ வீதிகள் மழைக்காலங்களில் மக்கள்நடமாட முடியாத நிலை. மைல் கணக்கான வெள்ளப்பகுதிகளின் வழியே மக்கள் பிரதான வீதிகளுக்கு வரவேண்டிய நிலையில் பல கிராமங்களின் வீதிகள் இருக்கும் பொழுது மின்சாரம் தங்களுக்கு வேண்டுமென்று முற்பணத்தைச் செலுத்திவிட்டு மக்கள் மின்சாரத்திற்காகக் காத்திருக்கும்வேளை குடிதண்ணீருக்காக எத்தனையோ கிராமமக்கள் உள்ளூராட்சி மன்றங்களைக் காத்திருக்கும் வேளையில் அப்பணத்தை வேறு திட்டங்களுக்குத்திருப்பென மாற்றுவதற்கு எந்தமக்களும் விரும்பமாட்டார்கள் இதற்கு மாருக யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. யோகேஸ்வரன் அவர்கள் தமது தமது தொகுதிப் பணத்திலிருந்தோ அல்லது யாழ்ப்பாணத் தொகுதி வரிப்பணத்திலிருந்தோ செலவழிக்கச் சம்மதம்என்றுசொல்லவில்லை. காரணம் யாழ்ப்பாணத்தொகுதி வரிப்பணம முழுவதும் மாநகராட்சி மன்றத்துக்கே போகின்றது மாவட்ட சபைக்கல்ல, யாழ்ப்பாணமக்களின் வரிப்பணம்மாநகராட்சி மன்றம்தனதுபகுதிக்குள்ளிருக்கும்அபிவிருத்திவேலைகளுக்குப் பயன்படுத்தும்பொழுது பின்தங்கிய கிராமப்புறங்களின் வரிப்கணம்மட்டும் தாம்போதியை நிரப்பப்போதுமென்று அவர் கருதியிருக்கமாட்டார் ஆகவே அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அடுத்த ஆண்டுக்கும் ஒவ்வொரு தொகுதியும் ஒவ்வொரு இலட்சமல்ல இவ்விரண்டு இலட்சமும் ஒதுக்கித்தருவதாகக் கூறியிருக்கும் இவ்வேளையில் இப்படி ஒரு கருத்தை தங்கள் பத்திரிகையில் அதுவும் ஆசிரியர் குறிப்பில் எழுதியிருப்பது வேதனைக்குரியது.

தாம்போதிவேலை ஆரம்பிக்கும்பொழுது பிரதமந்திரி ஒதுக்கித் தருவதாகக்கூறிய பணம் இதுவரை கிடைக்காதிருக்கும் போது அதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயம் நிலவுவதாயும், தங்கள் கவனத்துக்குத் தருகின்றோம்.

—க. சின்னத்துரை,
யா.மா.அபி.சபை உறுப்பினர்
ஆவரங்கால்.

---

## விதைநெல் விநியோகம்

[பண்டத்தரிப்பு]

தொல்புரம் கமநலச் சேவைப்பகுதியில் காலபோக நெல் விதைப்புக்குத் தேவையான விதைநெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

விவசாய அடையாள அட்டை வைத்திருக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் மூலமாக தம்முடன் தொடர்பு கொண்டு இந்த விதை நெல்லை பெற்றுக் கொள்ள முடியும் என்று தொல்புரம் கமநலச் சேவைப்பகுதி விவசாயப் போதனுசிரியர் ஏ. ஜெயவீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

---

## பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

வண்ணை பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவிலில் திருவிளையாடற் புராணபடன பூர்த்தி இன்று.

புராணபடன பூர்த்தியை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனை பஜனை என்பன நிகழும். நான்கு மாதங்களாகத் தொடர்ந்து நடந்த இப் புராண படனத்தை முன்னின்று நடத்தியவர்கள் திரு. மு, தியாகராசா, திரு.சா. அ. சிவசுப்பிரமணிம் ஆகியோராவர். [ப]

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "பிரிட்டிஷ்காரரிடமிருந்து விடுதலைபெற்றமக்கள் சர்வாதிகாரி ஒருவரை உருவாக்கக்கூடாது"

### - கொல்வின்

(களுத்துறை)

''பிரிட்டிஷ்காரரின் ஆதிக்கத்தை இந்த நாட்டில் நீடிக்கவிடாது சுதந்திரத்துக்காகப் போராடி அதனைப் பெற்றுக்கொண்ட மக்கள் புதிய சர்வாதிகாரி ஒருவர் தோன்றி அவர்களது உரிமைகளில் தலையிட முற்படுவதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.''

இவ்வாறு கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா களுத்துறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து அங்கு கூறியதாவது: ''தேர்தல் தொகுதிகள் அடங்கிய தேசப்படத்தை ஜனாதிபதி ஜே. ஆர். சுருட்டி வைக்கப்பார்க்கிறார். இதனை எவ்வாறு பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் சுதந்திரத்தைப் பெற்ற மக்கள் அனுமதிக்க முடியும்?

ஜனாதிபதி இத்தேர்தலில் வெற்றி பெற்றால் பத்து வருடங்களுக்கு தேர்தலின்றி ஆட்சி நடத்தப்போவதாக கூறியுள்ளார். இக்கூற்று வாக்களிக்கும் உரிமையுடைய மக்களுக்கு வேதனையைத் தருவதாக இருக்கின்றது'' என்றார். (கி)

# "சிறீமாவின் குடியியல் உரிமைகளை வழங்க தேர்தல் தேவையில்லை; என்றால் அதனை வழங்கமுடியும்"

### -ஜே. ஆர்.

(கொழும்பு)

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தாம் பதவிக்கு வந்தால் முதல் காரியமாக திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை மீண்டும் வழங்குவோம் என்று கூறி வருகின்றனர். இதற்கு ஒரு தேர்தலே வேண்டியதில்லை. என்னால் அதனை வழங்க முடியும்.''

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். களுத்துறையில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நானும் காலஞ்சென்ற திரு. டட்லி சேனநாயக்காவும் எம்முடன் ஒன்றாக அமைச்சரவையிலிருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தமது பதவியை இராஜினமாச் செய்தபோது மகிழ்ச்சியடைந்தோம். ஏனெனில் அவர் ஒரு புதிய கட்சியை தமது தலைமையின் கீழ் ஆரம்பித்து ஜனநாயகக் கொள்கைகளுக்கமைய அதனை வழிநடத்திச்சென்றார்.

இவ்வாறு அவர் ஒரு கட்சியை நடத்தியமை இந்த நாட்டில் ஒரே ஒரு கட்சியாக இருந்த ஐ. தே. கவுக்கு ஜனநாயகரீதியில் போட்டியாக விருந்தது. அத்துடன் மக்களுக்கும் ஒரு கட்சி மீது அதிருப்தி ஏற்படும் பட்சத்தில் வேறொன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது. குடும்பச் தலையீடுகள் காரணமாக ஸ்ரீ. ல. சு. க. பெரு ஆழமாகப் பிளவுபட்டுள்ளது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது குடியியல் உரிமைகளை இழந்தவுடனேயே கட்சித்தலைமையிலிருந்தும் இராஜினமாச் செய்திருக்கவேண்டும். ஏனெனில் அவரால் அவரது கட்சிக்காக ஒன்றுமே செய்ய முடியாதுள்ளது'' என்றார்.

# "தமிழர்களால் ஏற்படும் மரணத்தையும் நாட்டுநன்மை கருதி ஏற்றுக்கொள்வேன்"

### -றேகண

[கொழும்பு]

''நான் வடக்கே சென்று அரசியல் கூட்டங்களை நடத்த அஞ்சவில்லை. எனக்கு தமிழர்களால் ஏற்படக்கூடிய மரணத்தையும் நாட்டு நன்மை கருதி ஏற்கத் தயாராகவுள்ளேன்.''

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவரான திரு. றேகண விஜேவீர அலவ்வ என்ற இடத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தன்னை நெப்போலியன் என்று வர்ணித்து நாடு முழுவதிலும் பிரசாரம் செய்கின்றார். இப்பிரசாரம் நெப்போலியனுக்கு வார்ட்டஹாவில் இறுதியாக நடந்ததைப் பற்றி சிலருக்கு ஒன்றும் தெரியாதிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இதுவரை நாம் ஒரு அரசியல் கட்சியாக உருவெடுத்தது கிடையாது. இம்முறை இந்நாட்டு மக்களின் முழு ஆதரவும் எமது மக்கள் விடுதலைமுன்னணி கட்சிக்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தேவை. நாம் பதவிக்கு வந்தால் சுதந்திரம் பெற்றதிலிருந்து கடந்த 30 வருடங்களாக எட்டுத் தடவைகள் பதவிக்கு வந்து மக்களை ஏமாற்றிப் பிழைத்த ஐ. தே. கட்சியையும், ஸ்ரீ. ல. சு. கட்சியையும் ஒழித்துவிடுவோம்.

பதவிக்கு வந்த மறுகணமே பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலொன்றை நடத்துவேன்'' என்றார். (கி)

# கொப்பேகடுவவை பொலிசார் எச்சரித்தனர்!

## அம்பலாங்கொடையில் சம்பவம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவை பொலிசார் எச்சரித்த சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை ஏற்பட்டது.

திரு. கொப்பேகடுவ கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை மோட்டார் பவனியாகச் சென்று பிரசாரவேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

இவர் தாம் தரித்து நின்று பிரசார வேலைகளை மேற்கொண்ட இடங்களில் தமது மோட்டார் காரில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிச் சாதனத்தையே பயன்படுத்தினார்.

இவ்வாறு அம்பலாங்கொடைப் பகுதியில் திரு. கொப்பேகடுவ தமது மோட்டார்கார் ஒலிபெருக்கி மூலம் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தவேளை பொலிசார் இவர் நின்ற இடத்திற்கு வந்து பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு மட்டுமே ஒலிபெருக்கிகளைப் பாவிக்க அனுமதி வழங்கப்படுமென்றும் இத்தகைய பாணியிலான பிரசாரங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தனர்.

இதனையடுத்து திரு. கொப்பேகடுவயின் மோட்டார் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அதில் சென்றவர்களின் வாக்குமூலங்கள் பொலிசாரால் பதியப்பட்டன.

இவ்வாறு மோட்டார்கார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட வேளை திரு. கொப்பேகடுவ அங்கு வருவது அவசியமற்றதெனத் தெரிவித்து ஏனையவர்களை மட்டுமே கூட்டிச்சென்றனர்.

கொழும்பு கொம்பனித் தெருவிலிருந்து ஆரம்பித்த திரு. கொப்பேகடுவவின் இம் மோட்டார்கார் பிரசார பவனியில் பிரபல நடிகரும் திருமதி பண்டாரநாயக்காவின் மருமகனுமான திரு. விஜயகுமாரதுங்கவும் கலந்து கொண்டார். [கி]

# "தமிழர்பிரச்னையைத்தீர்க்க ஜே. ஆரால்தான் முடியும்"

## அமைச்சர் இராசு பிரசாரம்

(மட்டக்களப்பு

''தந்தை செல்வா திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கையை, ஸ்ரீமாவோவினால் கிழித்து வீசப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கையை 78ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தில் இடம்பெறச்செய்து தமிழ்மொழியைத் தேசிய மொழியாக அங்கீகரித்த ஜனாதிபதி ஜே ஆர்.ஜெயவர்த்தன அவர்களையே தமிழ் மக்கள் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்ய வேண்டும். தந்தை செல்வாவினால் அரசியல் ஞானி எனப் புகழப்பட்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களினால்தான் சிறுபான்மை இனமக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும்'' என பிரதேச அபிவிருத்தி அமைச்சந் திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் மட்டக்களப்பு வாசஸ்தலத்தில் மட்டக்களப்பு ஆதரவாளர்களை அழைத்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மகாநாடொன்றை அமைச்சர் இராசதுரை நடத்தினார்.

மேற்படி கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது அமைச்சர் இராசதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

உலகிலேயே ஒரு பொதுவுடமை நாடாக விளங்கும் கியூபா நாட்டின் தலைவர் பிடெல் காஸ்ட்ரோ கூட நமது ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன தலைமையில் தான் இலங்கைத்தீவு துரித அபிவிருத்தி கண்டுள்ளதெனவும் இந்த நாட்டின் திட்டங்களைத் தனது நாட்டிலும் நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் அறிவித்திருக்கின்றார். இந்தவகையில் நோக்கும்போது எமதுநாட்டு அபிவிருத்தியில் மூலகர்த்தா திட்ட நிபுணர் சிறந்த அரசியல்ஞானி, ஜே.ஆர். ஜெயவர்த்தனஅவர்களேயாகும்.

மீண்டும் ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களைத்தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யவேண்டுமென சிங்களப் பெரும்பான்மை மக்கள்மட்டுமல்ல மலையகமக்கள், முஸ்லீம்கள் போன்ற சிறுபான்மைமக்களும் அவரையே தலைவராகத் தெரிவு செய்யத் தீர்மானித்துவிட்டார்கள்.

ஆகவே நாமும் தந்தை செல்வாவினால் அரசியல்ஞானி எனப் புகழப்பட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களையே ஆதரிக்கவேண்டும் என்றார்.

## 'தமிழ் மக்கள் மனதில் கொள்ள வேண்டியது'

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம் போட்டியிடுகிறார் என்பதை மனதில் கொள்ளாமல், தமிழ் மகன் ஒருவர் போட்டியிடுகிறார் என்பதையே மனதில் கொண்டு அவருக்கு முழுத் தமிழினமும் வாக்களிக்கவேண்டுமெனக் கோரிக்கை விடும்படி பொதுச்சபையை வற்புறுத்தும் தீர்மானமொன்றை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக்கிளை நிறைவேற்றியுள்ளது. (இ)

## 50 பேருக்கு நீச்சல்பயிற்சி

[புலோலி]

அரசாங்கத்தின் விளையாட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இளைஞர்களுக்கும். யுவதிகளுக்கும் நீச்சல்பயிற்சி அளிக்கப்படவுள்ளது, இந்நீச்சல் பயிற்சிக்கானஐம்பது பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர பிரிவு விளையாட்டு அதிகாரி செல்வி ஸ்ரீ வசந்தி கந்தசாமி துரிதமாக மேற்கொண்டு வருகின்றார். விளையாட்டு அமைச்சின் திட்டத்துக்கமைய இந்நீச்சல் பயிற்சி மேற் மொள்ளப்படுகின்றது,

நீச்சல் பயிற்சி பெறவிரும்பும இளைஞர்களும், யுவதிகளும் விளையாட்டு அதிகாரியுடன் தொடர்கொள்ளுமாறு கோரப்பட்டு உள்ளனர். இந் நீச்சல் பயிற்சி பெற்று நீச்சல் வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்படுவார்கள். தேசிய ரீதியில் நடத்தப்படும் நீச்சல் போட்டியில் பங்குபற்றுவார்கள். இவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன, [க]

## பத்மநாதனுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம்)

நாதசுரகான கலாநிதி அளவையூர் நா. க. பத்மநாதன் ஜனாதிபதி விருது பெற்றமைக்காக கீரிமலை–சிவநெறிக் கழகம் பாராட்டுவிழா எடுக்கின்றது.

மேற்படி பாராட்டுவிழா 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் வீதியில் இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. ராம்குமாரசாமி, சங்கீத வட்டாரக்கல்வி அதிகாரி சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, திரு. த. சண்முகமுகசுந்தரம், யாழ். மாநகர உறுப்பினர் திரு. எஸ். தியாகராஜா ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

(உ)

## திருச்சி பேராயர் யாழ்.வருகை ரத்து

[அரியாலை]

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்சங்கத்தின் 75 வது ஆண்டுவிழாவிலும், எழுப்புதல் கூட்டங்களிலும் கலந்து கொள்ளவிருந்த தென்னிந்திய திருச்சபையின் திருச்சி, தஞ்சாவூர் மறைமாவட்டப் பேராயர் பேரருள் திரு கலாநிதி ஆர். போல்ராஜ் ஆண்டகை கலந்து கொள்ளமாட்டாரென நம்பிக்கையாகத் தெரியவருகிறது அரசு விசா கொடுக்கமறுத்ததால் அவர் இவற்றில் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று. இதனால் எழுப்புதல் கூட்டங்களும், 75 வது ஆண்டு விழாவும் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ]

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7 -ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் 'ஈழநாடு' இதழில் வெளிவரும். பண்ணிசை நாடகம் — பரதம் கதகளி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

## பண் இசை

### முதலாம் பகுதி
### இரண்டாம் பிரிவு

லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை பண் இசை, பிரமிளா சுந்தரலிங்கம் பண் இசை, நிர்மலா இரத்தினம் பண் இசை, சசிகலா சேனுதிராசா, பண் இசை, மஞ்சுளா நவரட்னம் பண் இசை, சியாமா நவரட்னம் பண் இசை, சுபத்திரை நடராஜா பண் இசை, குகனேஸ்பரன் பிரதாபன் பண் இசை, கனகசபை சற்குணராஜா பண் இசை, தயாளினி சந்தசர்மி பண் இசை, சேதா செல்வராஜா பண் இசை, சண்முகவல்லி கௌரிசங்கரசர்மா பண் இசை, சிதம்பரநாதன் ஞானகணேசன் பண் இசை, பாலசரோஜினி தில்லைநாயகம் பண் இசை, சிவரூபினி கனகசபை பண் இசை, துர்க்கா தேவி கணேசன் பண் இசை.

### சாதாரணசித்தி

வாணி இரத்தினஜோதி பண் இசை, நந்தினி சண்முகலிங்கம் பண் இசை, கீதா சேனுதிராசா பண் இசை, அஜந்தா சரவணபவானந்தன் பண் இசை, கலாதேவி தம்பிஐயா பண் இசை, மீனு சிவராஜா பண் இசை, கல்பனு சிவராஜா பண் இசை, அங்கயற்கண்ணி இரகுநாத முதலியார் பண் இசை, நிரந்தரி கனகசபை பண் இசை, இரகுநாதமுதலியார் தில்லைக்கண்ணன் பண் இசை, அருந்ததி சபாநாதன் பண்இசை, லோகநாயகி சபாரத்தினம் பண் இசை, திருமலர்ச்செல்வி இராசையா பண் இசை.

## பண் இசை

### முதலாம் பகுதி
### சாதாரண சித்தி

செல்வமனோகரி வைகுண்டக்கம்பர் பண்இசை, ராதிகா தர்மராஜா பண் இசை, கிரிசாந்தி செல்வநாயகம் பண் இசை, பத்மராணி இலட்சுமணர் பண் இசை, விஜயராணி சின்னத்தம்பி பண்இசை, லிங்கேஸ்வரி அழகரத்தினம் பண் இசை, கந்தையா சுஜந்தா பண் இசை, நந்தினிதேவி இராசதுரை பண் இசை, இளையதம்பி குகனேசன் பண் இசை, சுப்பிரமணியம் புவனேஸ்வரன் பண் இசை. இலங்கைநாயகி இளையதம்பி கமநளினிபண்இசை குணரட்ணம்பண் இசைசரோஜினிதேவி இராசதுரை பண்இசை, ஜெயரத்தினம் வீரசிங்கம் பண் இசை, கஸ்தூரி அப்பாத்துரை பண் இசை, கலையரசி சிவராசா சைலஜாபண்இசை, கணபதிப்பிள்ளை பண் இசை, நந்தினிதியாகரராசா பண்இசை, மாலினி தியாகராசா பண் இசை. உமா சரவணபவான் பண் இசை, சுபத்திராதேவி கணேசன் பண் இசை, மதுராதேவி கணேசன் பண் இசை.

### இரண்டாம் பகுதி
### முதலாம் பிரிவு

தாரணி தியாகராஜா பண் இசை, பாலசெல்வதி பாலசுப்பிரமணியம் பண் இசை, பாலகௌரி பாலசுப்பிரமணிய ஐயர் பண் இசை, கிருஷ்ண பவானி கணேசன்பண் இசை, கணேஸ்வரன் சபேசன் பண் இசை, கனகசபை சற்குணராஜா பண் இசை, வாசுகி சிதம்பரநாதன் பண் இசை.

## பண் இசை

### இரண்டாம் பகுதி
### இரண்டாம் பிரிவு

மனோரஞ்சிதம் பாலசுப்பிரமணிஐயர் பண் இசை, யசோதா தியாகராஜா பண் இசை, பாலநாயகி பாலசுப்பிரமணியம் பண் இசை, சபாரத்தினம் திருமாறன் பண் இசை.

### மூன்றும் பகுதி
### முதலாம் பிரிவு

நாகராஜேஸ்வரி துரைரத்தினம் பண் இசை, வாசுகி இராசலிங்கம் பண் இசை, கிருஷ்ணவேணி மயில்வாகனம் பண் இசை, லோகினி சண்முகதாசன் பண் இசை, ஷண்முகப்பிரியா குமாரசாமி பண் இசை, சியாமளா கணேஸ்பரன் பண் இசை.

### இரண்டாம் பிரிவு

ஞானலக்ஷ்மி நல்லையா பண் இசை, மகேஸ்வரி நாகலிங்கம் பண் இசை, சந்திரிகா கணேஸ்பரன் பண்இசை, திருமதி மீ சண்முகராஜா பண் இசை,

### சாதாரண சித்தி

பத்மாவதி சுப்பிரமணியம் பண் இசை, சிவயோகி நவரத்தினம் பண் இசை.

## நாடகம்

### முதலாம் பகுதி
### முதலாம் பிரிவு

கந்தசாமி ஜீவமோகன் நாடகம்

### சாதாரண சித்தி

ஜெயசீலன் ஜெயதாஸ் நாடகம்

### இரண்டாம் பகுதி
### முதலாம் பிரிவு

கிறிஸ்ரீன் மலரினி அரியரத்தினம் நாடகம்.

(முற்றும்)

## இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதவி பங்குத்தந்தை வண. பிதா. மொண்போட் அடிகளார் விடத்தல் தீவிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவரது இடத்திற்கு புதிதாகக் குருபட்டம் பெற்ற வண. பிதா. யோகராசா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வர்த்தகர் வீட்டில் திருட்டு

(வவனியா)

வவனியா நகரின் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பெருள்கள் களவாடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவதினம் நள்ளிரவு வீட்டினுள் யன்னல் ஊடாக புகுந்து திருடர்கள் மேற்படிப் பொருள்களை திருடிச் சென்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. திருடர்களைப் பிடிப்பதற்கு பொலிஸ் நாய்கள் வரவழைக்கப்பட்டும், யாரும் கைது செய்யப்படவில்லை. புலன் விசாரணைகளை வவனியா பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## ஆசிரியர் ஏ. இராமச்சந்திர சர்மா

நண்பர் இராமச்சந்திர சர்மா மரண அறிவித்தலைக் கேட்டதும் மனம் கலங்கிற்று.

பிறந்தவர் சாவது நியதி. இவ்விதிக்கு உட்பட்டு பலர் மறைவதைக் கண்டுள்ளோம். உற்றார், உறவினர் அல்ல நண்பர்கள் தானும் இறந்தால் துயரத்திற்கு ஆளாகின்றோம். அது பாசத்தினால் ஏற்படுவதுஎன்றும் கூறிவிடலாம். ஒரு சிலருக்கு மட்டுமே மனம் கலங்கிய நிலைமை. அவர்களது நற்பண்புகளைத் தாங்கிநிற்கும் கட்டுஞாபகப் படுத்திகொண்டு அவர்களைப்பற்றித் தியானிப்பதற்கு உதவும்கருவி. ஆனால் தாங்கிநிற்கும் கட்டு தகனக்கிரியைகளோடு அழிந்துவிடும். அதேவேளை அவர்களும் அழிந்துவிட்டார்கள்என்றுசொல்ல முடியாதநிலை. அத்தகைய பெரியார்களுள் காலஞ்சென்ற இராமச்சந்திரசர்மா ஒருவராவர்.

விளம்பரம் பெருத ஒருமனிதர். பத்திரிகைகளில் இக் கட்டுரையைத்தவிர்த்து அவரது பெயர் பிரசுரிக்கப்பட்டிருக்கமாட்டாதென நினைக்கிறேன். மேடைகளிலும் தோன்றியதில்லை. ஏதேனும் எழுத்தில் படைப்புகள் உண்டென்றும் கூறஇயலாது. அவ்வாறிருந்தும் பெரியாரெனக் கூறுவதற்கு என்ன ஆதாரம் என்று கேட்பதற்கு சாதாரண மதிப்பீட்டு அளவைகள் இடங்கொடுக்கலாம். இவ்வினாவிற்கு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பதில் உணர்ச்சிகளுக்கு அப்பாலுள்ள துறையினின்றும் எழுகின்றது. இதயத்தின் உட்தளத்திலிருந்து அது பக்குவப்பட்ட உள்ளங்களை அறிய உதவும். சடத்தாலான கருவிகள் இவ்வித ஆய்வுற்கு உதவமாட்டா.

இற்றைக்கு இருபத்தாறு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களுக்கு எனது ஞாபகம் இழுத்துச் செல்கின்றது. உறவுகள் கால அளவைக்கு அப்பாற்பட்டதாகையால் மனதில் படம்போல எழுகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது லண்டன் பல்கலைக்கழக பட்டப்படிப்புகளை முடித்துக் கொண்டு, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமைபுரியவந்தார். விபுலானந்த அடிகள் தான் கண்ட காட்சிகளை கல்வித்துறையில் நிறைவேற்ற உருவாக்கிய நிறுவனமாகையால் சர்மா அவர்களுக்கு அது உகந்ததோர் சூழலாக அமைந்தது. வடமொழி, தமிழ், ஆங்கில இலக்கியங்களை பயின்று பண்படுத்தப்பட்ட உள்ளம் அவரது முகத்திலும், நாவிலும் ஒளியையும், இனிமையையும் தந்தருளியது. சக ஆசிரியர்களும், மாணவர்களும் அன்போடு தன்னுடன் பழகக் கூடிய வாய்ப்பைபதி தந்தார். 'அந்தணர் என்போர் அறவோர்' எனும்ஞானியின் கூற்றுக்கு தானே இலக்கணம் எனும் அளவிற்கு நாம் தொழில்புரியும் சூழலும் அன்னாரது வருகையால் இன்பமயமாயிற்று.

இரண்டு வருடங்கள் மட்டுமே அவருடன் இருந்து பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதன்பின் இடையிடையே மட்டும் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம். நமது நடவடிக்கைகள் யாவும் அவசர அவசரமாக நிறைவேற்றும் காலம் இது. அமைதியாகவும், ஆறுதலாகவும் உள்ளங்கள்தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்கள் அரிதாகிக்கொண்டே வரும் சூழலில் வாழ்கிறோம். நட்பும் வேகத்திற்கேற்ப உதட்டளவில். அவ்வாறிருந்தும் அவரைக்காணும் அரிய சந்தர்ப்பங்களில் மனநிறைவு ஏற்பட்ட குதூகலம். ஆழ்ந்த இலக்கியங்களை படித்துப் பண்பட்ட உள்ளம் சைக்கிள் வண்டியிலிருந்து இறங்கிசற்று நேரமாகுதல் தன்னிறைவை எனக்கும் பகிர்ந்து கொடுக்க முயன்ற காட்சியே எனதுஇன்றைய மனம்கலங்கிய நிலைக்குக்காரணம்.

இராமச்சந்திர சர்மா காலமானர். அச்செய்தி அவரது உடலுக்குரியது. இத்தகைய பெரியார்கள் எம்மைவிட்டு பிரிவதில்லை. நாமும் அதனை விரும்புவதில்லை. சர்மா அவர்களது ஆழ்ந்த சிந்தனைகள் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறை என்போன்ற பலரை நெறிப்படுத்த உதவிற்று. தொடர்ந்தும் உதவும். இத்தகைய பெரியோர்களே வரலாற்றை ஆக்கிப் படைக்கின்றனர்.

அன்னாரது நாமம் நீடூழி வாழ்க.

கலாநிதி
வீ. இராமகிருஷ்ணன்

## சனசமூக நிலையத்தின் கைத்தொழில் பிரிவு

(புலோலி)

இமையாணன் வடக்கு ஜோதி சனசமூக நிலையம் 40,000 ரூபா செலவில் கைத்தொழில் பிரிவு ஒன்றை நிர்மாணித்து வருகினறது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின்கீழ் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து உள்ளார். இக்கைத்தொழில் மண்டப வேலைகள் நிலையத்தலைவர் திரு. இளையதம்பியின் தலைமையில் கட்டிடக் குழுவினரால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உடுப்பிட்டி எம். பி. இக்கட்டிடவேலைகளை நேரில் பார்வையிட்டுத் திருப்தி தெரிவித்துக் கொண்டார் என்றும் இம்மாத முடிவுக்குள் கைத்தொழில் மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் என்றும், இக் கைத்தொழில் மண்டபத்தில் குடிசைக் கைத்தொழில்களும், பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் பனம் பொருள் உற்பத்தித் தொழில் துறைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் சனசமூக நிலையச் செயலாளர் திரு. சி. கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

## "ஆரம்ப கல்வி வளர்ச்சிக்கு பாலர் பாடசாலைகள் முன்மாதிரி காட்டவேண்டும்"

(நெடுந்தீவு)

நெடுந்தீவு-குருநகர் மக்கள் தமது சமூகம் முன்னேறவேண்டும் என்பதில் இப்போது கவனம் செலுத்தியிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சிறுவர்களுக்குக் கல்வியில் ஆர்வமூட்டுவதன் மூலம் அவர்களின் உள்ளத்தில் நல்ல சிந்தனைகள் ஏற்படவும் புனிதமான உணர்வுகள்தோன்றவும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் முயற்சிக்கவேண்டும். ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்குப் பாலர் பாடசாலைகள் முன்மாதிரியாக விளங்குகின்றன.

இவ்வாறுநெடுந்தீவு குருநகர் சென். அன்ரனிஸ் பாலர் பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் திரு.சி.வ. சங்கரப்பிள்ளை கூறினார்.

திரு.கே.மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவை நெடுந்திரு பங்குத்தந்தை வண. பிதா பீட்டர் துரைரத்தினம் மங்கல விளக்கேற்றித் தொடக்கிவைத்தார்.

நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் திரு. செ. மகேசு பேசும்போது "இளமையிலேயே கல்வியில் நாட்டம் ஏற்பட்டால்தான் பெரியோர்களானதும் நாட்டை வளப்படுத்தக்கூடிய ஆற்றலுக்கு ஒருவன் ஆளாகலகாம். இதனால் தான் சில நாடுகளில் சிறுவர் மத்தியில் பலதரப்பட்ட பொருட்களை வைத்து அவர் எந்தத்துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்து அதற்கேற்ப பயிற்சியை அவர்களுக்கு வழங்குகிறார்கள். அதே முறை இங்கு ஏற்படக்கூடியதான கல்வித்திட்டம்உருவாகவேண்டும்" என்றார்.

நிலாஜோதி நாடக மன்றத்தின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## "குடத்தனை மணற்காட்டில் கடற்கரையில் மணல் அள்ளுவதை தடைசெய்க!"

[கரவெட்டி)

உதவி அரசாங்க அதிபரின் உத்தரவுடன் குடத்தனை மணற்காட்டில் கடற்கரை மணல் அள்ளுவதற்கான முழு உரிமைகளையும் பருத்தித்துறை, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவேண்டுமென வலியுறுத்துவதென்று வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகத்தலைவர் திரு. ஏ.என். எஸ். திருச்செல்வத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தும்பளைக் கிராமோதய சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

கிராமோதயசபைக் கூட்டம் தும்பளை சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைத்தலைவரும், தும்பளை கிராமோதய சபைத்தலைவருமான திரு. சி. மு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

வராத்துப்பளை வல்லிபுரக்குறிச்சி கற்கோவளப் பகுதிகளிலுள்ள கடற்கரை மணல் களவாகக் கடத்தப்படுவது உடன் தடைசெய்யப்படவேண்டுமென இப் பகுதிப் பொதுமக்களும், தும்பளைக் கிராமோதய சபையும் கோரியதற்கிணங்க இம் மாதம் 16ந் திகதி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இது சம்பந்தமான மகாநாடு ஒன்று நடைபெற்றது.

## முகாமையாளராக இடமாற்றம்

[கரவெட்டி

வடபிராந்திய போக்குவரத்துச்சபை மத்திய பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி திரு, எம். விஜயரத்தினம் மன்னார் பஸ்சாலை முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிச்சாலை முகாமையாளராக திரு. ரி. கந்தையா அண்மையில் பதவி ஏற்றுள்ளார்.

திரு. கந்தையா முன்னர் யாழ்ப்பாணசாலை உதவிமுகாமையாளராகப் பணிபுரிந்தவராவார். (அ)

## ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும்

[புலோலி]

பருத்தித்துறை கிழக்கிலுள்ள மணற்காடு சென் அன்ரனிஸ் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 5வது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 24ம், 25ம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக கழகத் தலைவர் அறிவித்துள்ளார். [அ]

## இடமாற்றம்

[கரவெட்டி]

கிளிநொச்சி உதவிப் பங்குத்தந்தை வணபிதா எல். எம். மொன்போட் விடத்தல் தீவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு அண்மையில் குருப்பட்டம் பெற்ற வணபிதா யோகராசா அடிகளார் நியமிக்கப் பட்டுள்ளார். (அ)

# முன்னேற்றப்பாதையில் ப. பொ. அபிவிருத்திசபை!

## நல்லூர் 'சிவா' மகிழ்ச்சி

(கரவெட்டி)

'கடந்த காலங்களில் அடையாத அபிவிருத்திகளை இன்று பனம் பொருள் அபிவிருத்திச் சபை நிலைநாட்டிவருகின்றது. மிகவும் குறுகிய காலத்தில் இச்சபைத் தலைவர் திரு. க. நடராசா மேற்கொண்டுவரும் செயற்திட்டங்களே இவ்வெற்றிக்குக் காரணம். இதன்மூலம் எமது பொருளாதாரத்திற்கும் மக்களின் மேம்பாட்டிற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது.'

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் துன்னாலை தெற்கு கலிகைக்கந்தன் கைத்தொழில் மண்டபத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

துன்னாலை கலிகைக்கந்தன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நிறுவப்பட்ட இக்கைத்தொழில் மண்டபத் திறப்பு விழா ஆசிரியர் திரு. க. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'உடுப்பிட்டி எம். பி.யால் உருவாக்கப்பட்ட பல கைத்தொழில் மண்டபங்களில் இக்கைத்தொழில் மண்டபத்தைத் திறந்துவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவரது அரசியல் தீர்க்கதரிசனத்தின் பயனாக இப்பகுதியின் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் கைத்தொழிற்துறைகளை ஏற்படுத்திவருகிறார். எந்தப் பகுதி மக்களுக்கு என்னென்ன தேவையோ அதை உணர்ந்து செயற்பட்டுவரும் உடுப்பிட்டி எம். பி. தம்பி இராசலிங்கத்திற்கு உடுப்பிட்டித் தொகுதி மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

'தமிழ் இனத்தின் ஒற்றுமைச் சின்னமாக உடுப்பிட்டி எம். பி. தம்பி இராசலிங்கம் விளங்குகின்றார். இதற்குமுன்னர் அரசியல் ரீதியாக ஏற்பட்ட வேற்றுமையின் காரணமாக நாம் சமுதாயரீதியில் பல கூறுகளாகப் பிரிந்திருந்தோம். இந்த வேற்றுமைகளை அகற்ற வேண்டுமென்பதற்காகவே 1977ல் திரு. இராசலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். அவரது வெற்றி இந்த வேற்றுமைகளை அகற்ற உதவியாக இருந்தது.

### அரசியல் பிரதிநிதியல்ல

''திரு. இராசலிங்கம் ஒரு சமுதாயப் பிரதிநிதி. இச்சமுதாயப்பிரதிநிதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு கருவியாக, சின்னமாக, தலைவராக விளங்குகின்றார். இராசலிங்கம் ஓர் அரசியல் பிரதிநிதியல்ல.

''கடந்த 14, 15 ஆண்டுகளாக இத்தொகுதிக்குச் செய்யாத பல வேலைகளை 4 ஆண்டுகளில் உடுப்பிட்டி எம். பி. செய்து முடித்துள்ளார். அவர் ஒரு சமுதாயத்திற்குத்தான் சேவை செய்கிறார். ஒரு சில பகுதிகளை ஒதுக்கினார் என்று கூறப்படுவதை நான் மறுக்கின்றேன், அவர் இத்தொகுதியின் முழுத் தேவைகளையும் பாரபட்சமற்ற முறையில் நிறைவேற்றி வருகின்றார்.''

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா, யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. என். இராசேந்திரன் உட்படப் பலர் இத்திறப்புவிழாவில் கலந்துகொண்டனர்.

புதிய கைத்தொழில் மண்டபத்தில் இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் பனம் உற்பத்தி கைப்பணிப் பொருட் கண்காட்சியும் இடம்பெற்றது. (அ)

## இசைக்கலை தமிழரின் பழம்பெரும் சொத்து

[சாவகச்சேரி]

''தமிழ்மக்கள் நீண்டகாலமாக இசையும் கலையையும் தங்கள் உயிராக வளர்த்து வருகின்றார்கள். தமிழரில் ஒரு பகுதியினர் மாத்திரம் கலையில் நாட்டம் கொண்டிருந்த காலம் போய் இன்று எல்லோரும் அதில் ஆர்வம் செலுத்தி வருகின்றார்கள். இயல் இசை ஆடல்கலை தமிழனுடைய ஒரு தனிச்சொத்து''

சாவகச்சேரி இயல் இசை ஆடல் நிலையப் பரிசளிப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலைய இயக்குனர் திரு. கி. கனகசபாபதி தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடந்த விழாவிற்கு திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி வாழ் இசையாசிரியர்கள், இசைக்கலைஞர்கள், இசைரசிகர்கள், பலர் கலந்துகொண்ட மேற்படி விழாவில் சாவகச்சேரி நகர முதல்வர் திரு. சி. க. மயில்வாகனம், முன்னைநாள் தலைவர் திரு. எஸ். கே. திரவியநாயகம், அறிஞர் சண்முகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிலைய இயக்குனர் ஆண்டறிக்கைத் தலைமைப் பேருரையின் பின் தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் பேசியதாவது:

தமிழினத்தின் பழம் பெரும் சொத்து பரதநாட்டியம்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகாரத்தில் கூட இப்பரதநாட்டியத்தைப் பற்றி இளங்கோவடிகளால் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய பழம் சிறப்புமிக்க ஆடல்கலையின் அருமை பெருமைகள் குறையாமல் நண்பர். கனகசபாபதியின் தலைமையின்கீழ் வளர்ச்சியடைந்து வருவது கண்டு உண்மையாக மகிழ்ச்சியடைகின்றேன். இன்று நடனக்கலை தமிழர்களின் பொதுச் சொத்தாகத்திகழ்கிறது. எமது மக்கள் எல்லோரும் மிகவும் ஊக்கத்தோடு இசைக்கலையை வளர்த்துவரவேண்டும்.

சித்தியடைந்த மாணவ, மாணவிகளுக்கு திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

## சமய விரிவுரை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தாவின் சமயவிரிவுரை இம்மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை புலோலி சாரையடி வீரபத்திரர் ஆலயத்தில் நிகழும் 'சமயவாழ்வு மனிதனுக்கு அவசியமா?' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

அடுத்தமாதம் முதலாம் திகதி மாதனை காளி கோவிலில் 'இறையனுபவம்' பற்றி சுவாமி உரை நிகழ்த்துவார். (ப)

## ஸ்ரீசுப்பிரமுனியா மீண்டும் யாழ். வருகிறார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் சீவன் முத்தராய் பிரகாசித்த யோகர் சுவாமிகளின் அமெரிக்க சீடரான ஸ்ரீசிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ம் திகதி இலங்கைக்கு வந்து 4ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் இவர் அளவெட்டியிலுள்ள தனது ஆச்சிரமத்தில் தங்குவார். ஒருவாரம் தங்கியிருந்து யாழ்ப்பாணத்தின் பல இடங்களுக்கும் செல்லவிருக்கும் இவர் ஜனவரி மாதம் 12ம் திகதி திருக்கேதீஸ்வரம் மன்னார் வழியாக இந்தியாவுக்குச் செல்வார்.

அகில உலக ரீதியில் இந்து மத சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டுப் பணிபுரியும் இவர் மேலைத்தேசத்தில் தோன்றி மேலைத்தேசத்திலும் இங்கும் சித்தாந்த சைவத்தைப் பிரசாரம் செய்யும் ஒரு துறவி என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டு வழக்கு, சந்தேக நபர் றிமாண்டில்

[சாவகச்சேரி]

வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த கோவிந்தன் தம்பிராசா, திருட்டு வழக்கில் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு 82 செப்ரம்பர் 3ம் திகதி 2500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைச் சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தில் சிவசம்பு நாகமுத்து என்பவருடைய கழுத்திலிருந்து அறுத்ததாக சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் முருகன் நடேசன் என்பவருடைய முறைப்பாட்டின்படி எதிரிகைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டபோது அவருக்காக ஆஜராகிய சட்டத்தரணி வ. செல்லத்தம்பி எதிரியைப் பிணையில் விடும்படி விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிபதி இம்மாதம் 27ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (அ)

## பாரதியார், வட்டு 'திரு' உருவப்படங்கள்

(சுழிபுரம்)

அமரகவி சுப்பிரமணிய பாரதியாருக்கும் மறைந்த வட்டு எம். பி. அமரர் தா. திருநாவுக்கரசுக்கும் பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூக வாலிபர் சங்க மண்டபத்தில் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

பண்டிதர் ப. இராசகுரு மேற்படி உருவப்படங்களைத் திரைநீக்கம் செய்து வைத்தார் இந்நிகழ்ச்சியின் போது அமரர் திருநாவுக்கரசுக்குமௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. [அ]

## மானிப்பாயில் இன்றும் நாளையும் புத்தகக்கண்காட்சி

யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொதுநூலகத்திற்குப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அன்பளிப்புச் செய்துள்ள 1500 புத்தகங்களையும் அவரிடமுள்ள 500 புத்தகங்களையும் கொண்ட புத்தகக் கண்காட்சி இன்றும், நாளையும் மானிப்பாய் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எஸ். பற்றிக் புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார் 22-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் மானிப்பாய் கிராமோதயசபைத் தலைவர் திரு சிவ. இராஜேந்திரன் புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

22-ந் திகதி புதன்கிழமை மாலை மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கத்தினால் பேராசிரியர் அ. சின்னத்தம்பிக்குப் பாராட்டு விழா மானிப்பாய் பட்டினசபை மண்டபத்தில் நடாத்தப்படும்

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கலாநிதி கெ. கிருஷ்ணானந்தசிவம், கலாநிதி என். சரவணபவன் உட்படப் பலர் பாராட்டுரை வழங்குவார்கள். [உ(

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
ஞானக்குழந்தை
24—30 வரை
நிறம்மாறுத பூக்கள்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 5 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
Death Diamention

றீகல் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்–ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி யாழ். நகர்]
21—23
Daily 5 Shows
Steye Mc Queen in
THE HUNTER
Action— Color
விரைவில்! 'நான்!'

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

ராணி (யாழ் நகர்) இன்று 81வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]
24-முதல் பணமா பாசமா

மனோகரா (யாழ்ப்பாணம்)
10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

6-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
★ சந்திரசேகர் ★ சுபாஷினி ★ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில் : சிவாஜி, வாணிஸ்ரீ
வசந்தமாளிகை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

# பாராளுமன்றத…

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''கூட்டணித் தலைவர்கள், தமிழ் மக்கள் ஜனாதிபதித்தேர்தலில் பங்குகொள்ளவோ, வாக்களிக்கவோ தேவையில்லை என அறிக்கைவிடுத்துள்ளனர். தாம் சிங்கள ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முனைந்து நிற்கும் தமிழ்த் தேசிய இனம், சிங்கள இனத்தின் மீது ஆட்சிசெலுத்த முற்படவில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் அம்முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படியாயின்,

''தமிழ்த் தேசிய இனத்தின் மீது ஆட்சிசெலுத்த நடைபெறும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசிய இனத்தின் சார்பில் ஓர் சிங்கள ஜனாதிபதியை, தமிழ்த் தேசிய இனம் ஏற்கத்தயாராகவில்லை. தமிழ்பேசுமினம் ஒரு தமிழ் பேசும் மகனுக்கேதனது ஏகோபித்த ஆதரவைத் தெரிவிக்கவேண்டும் என்ற முடிவிற்கு கூட்டணித் தலைவர்கள் வரத்தவறியதேன்?

## ஜனாதிபதியுடன் ஏன் பேச்சு?

''இன்றும் தமிழ்பேசும் இனத்தின் மீது ஆட்சிசெலுத்தும் சிங்கள ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையைக் கூட்டணித் தலைவர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவது எதற்காக?

''சிங்களத் தேசிய இனத்தின் மீது ஆட்சி செலுத்த விரும்பவில்லை என்று இம்முடிவை மேற்கொண்ட கூட்டணித் தலைவர்கள், அதே வேளையில் இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பேசும் தேசிய இனம் பங்குபற்ருது விட்டாலும்கூட, வாக்களிக்காது விட்டாலுங்கூட, தெரிவாகும் ஜனாதிபதி தமிழ்த் தேசிய இனத்தின் மீது ஆட்சி செலுத்துவார் என்பதனை மறந்தது ஏன்?

''தமிழ்க் காங்கிரஸையும் என்னையும் விமர்சிக்க முற்பட்ட கூட்டணித் தலைவர்கள், தமிழ் பேசும் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது எனக்காட்ட முற்பட்டுள்ளார்கள். தற்பொழுது இருக்கின்ற தமிழ்க் காங்கிரஸ் ஒன்றே எனபதனையும், அதன்செயலாளர் குமார் பொன்னம்பலம் என்பதையும் அண்மையில் ஏற்றுக்கொண்டு, முன்பு நாங்கள் தமிழ்க் காங்கிரஸ் அல்லஎன்று வழக்குத் தொடுத்த கூட்டணித் தலைவர்கள், அவ்வழக்கை வாபஸ்பெற்றதேன்? எந்த இலங்கை ஆட்சியின்கீழ் பணிபுரியும் தேர்தல் ஆணையாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், இலங்கைத் தமிழரசுக்கட்சியையும் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகப் பிரகடனப்படுத்தினரோ அதே தேர்தல் ஆணையாளர் தான் என்னைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ்க் காங்கிரஸை அங்கீகரித்தகட்சியாக பிரகடனப்படுத்தியுள்ளார் என்பதனை கூட்டணித்தலைவர்கள் மறுக்க முடியாது. தமிழ்க் காங்கிரசும் இலங்கைத்தமிழரசுக்கட்சியும் இணைந்து தான் தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாகியதென்றால் மீண்டும், மீண்டும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு அங்கீகாரம்கோரி சிங்கள தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்து அங்கீகாரம் பெறுவதேன்? அதுவும் தமிழினத்தின் ஒற்றுமையைக் காட்டுவதற்காகவா?

1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்பேசுமினம் ஈழக்கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டது என்றால் ஏன் 1979 உள்ளூராட்சித் தேர்தல் 1981 அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் மீண்டும் அவ் ஆணையைக் கூட்டணித் தலைவர்கள் தமிழ்பேசும்இனத்திடம் கேட்டதேன்? இந்நாட்டில்வாழும் முழுத்தமிழ்பேசும் மக்களிடம் ஆணைகோருவது சிங்கள ஆட்சியாளர் தமிழீழம் பற்றித்தமிழ்மக்கள் கொண்ட ஆர்வம் குறைந்துவிட்டது என்பதனைக்காட்ட வழி வகுக்கும், எனக் கூட்டணித்தலைவர் கூறியுள்ளார்கள். அப்படியானால் வடக்கு கிழக்குக்கு வெளியேவாழும் தமிழ்பேசும்மக்கள் தமிழர் அல்லர் எனக் கூட்டணித்தலைவர்கள் கருதுகிறார்களா? அவர்கள் தமிழீழத்திற்கு வாக்களிக்க மாட்டார்கள் என எவ்விதம் கூட்டணித் தலைவர்கள் இன்றுகூறமுடியும்.

## குட்டிமணிக்கு விட்டுக்கொடுக்க தயாராகஇருந்தேன்

''இத் தேர்தலில் நான் போட்டியிடுவது தமிழ்க் காங்கிரசிற்கு புதுஉருவம்கொடுப்பதற்கே என கூட்டணித் தலைவர்கள் கூறியுள்ளார்கள். அப்படியாயின் குட்டிமணி இத் தேர்தலில் போட்டியிடுவது பற்றிப் பிரஸ்தாபித்ததும், போட்டியினின்றும், நான் என்னை விலக்கமுன்வந்தேன். எதற்காக கூட்டணியிடமும் இ.தொ.கா.விடமும் போட்டியிடுமாறு கோரினேன். எதற்காக குட்டிமணியை இலங்கைத் தமிழரசுக்கட்சிசார்பில் நிறுத்துமாறு திரு. சந்திரகாசனிடம் கோரினேன். எதற்காக குட்டிமணிக்கு தமிழ்க் காங்கிரசில் நியமனம்தேவைப்படுமிடத்து வாங்கி நான் போட்டியினின்றும் விலகமுன்வந்தேன் என்பதனைத் தமிழ் பேசும் மக்கள் சிந்திக்கவேண்டும்.

ஒற்றுமை வேண்டுமென்றால் அது கொள்கைக்காக இருக்க வேண்டுமேயொழிய ஒரு சிலருக்குப் பதவி தேடிக்கொடுக்க கூடாது என்பதேசிறையில் வாழும் தமிழ் இளைஞர்கள் உட்பட முழுத்தமிழ்பேசும் இனத்தின் தணியாததாகமாகும்.

ஐந்து சிங்களக்கட்சிகளை எதிர்த்து ஒரே தமிழ் வேட்பாளனாக நான் இத்தேர்தலில போட்டியிடுகிறேன். தமிழ் பேசும் இனத்தின் இறைமைக்கு, தமிழ்த் தேசிய இனம் ஒரு சுதந்திர தனிநாட்டையே விரும்புகின்றது. ஒரு சிங்கள ஜனாதிபதியை அல்ல என்பதை இந்நாட்டுக்கும் அகில உலகிற்கும் காட்டுவதற்கும் அளிக்கப்பட்டிருக்கும் ஒரேஒரு சந்தர்ப்பம் இத்தேர்தல் இதனை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் எனக்கு வாக்களிக்கவேண்டும் என்பது தமிழன்னையின் அன்புக்கட்டளையாகும்.

லேத் இயக்குநர்களுக்கும்
பயிற்சியாளர்களுக்கும்
(LATHEMAN and TRAINEE)

## வெற்றிடங்கள்

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும், தொழில் நுட்பக் கல்லூரியில் Machining Course சித்தியடைந்தவராக அல்லது வேறு இடங்களில் பயிற்சி பெற்றுள்ளவர்களாக இருப்பவர்கள் லேத்தில் பயிற்சி பெறுவதற்கும் (Trainee) தேவை. நேரில் வரவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி
4597

ஷர்மிளா எண்டர்டெயின்மெண்ட்ஸ்
லெட்சுமி ஜுவலர்ஸ் இணைந்து அளிக்கும்
தென்இந்திய திரைப்பட புகழ் நாட்டியமணி

## ஜெயமாலா வுடன்

மஞ்சுளா, மணிமாலா, விமலா, ராஜி
மற்றும் பலரின் நடன இசை நிகழ்ச்சி

## இன்று (21-09-82)

யாழ். மாநகர முதல்வர்
திரு. இராஜா விசுவநாதன்
பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

செப்ரெம்பர் 21, 22, 23 திகதிகளில்
மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

டிக்கெற் கிடைக்கும் இடங்கள்:

- வீனஸ் றேடியோ வாச்வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- விமாகி, 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- சிவராசா அன் கொம்பனி, பஸ் ஸ்ராண்ட், பருத்தித்துறை.
- லக்னி வாசா, 16, 2-ம் குறுக்கு வீதி, நல்லூர்.

4581

## கிரிக்கெட்:

### 4ம் நாள் ஆட்டம்

சென்னை)

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் நான்காவது நாள் ஆட்டம் இன்று காலை 10மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த டெஸ்ட்டில் இலங்கை கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 346 ஓட்டங்களையும், இந்தியக்கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 4விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 398 ஓட்டங்களையும் எடுத்திருந்தது தெரிந்ததே.

(வெ)

# இப்படியும் நடக்கிறது

ஐம்பது ஜோடி மேளம்.

இதன் செலவு மதிப்பீடு; முப்பத்து ஐயாயிரம் (35,000) ரூபா.

கவர்ச்சிகரமான சோடனைக்கு மலைநாட்டிலிருந்து விதம் விதமான பூக்கள்.

இதன் செலவு மதிப்பீடு; முப்பதினாயிரம் ரூபா.

கண்ணைப் பறிக்கும் மின் அலங்காரம்.
இதன் செலவு மதிப்பீடு; ஐம்பதினாயிரத்துக்கு மேல்!

என்ன... ஏதோ... புதிய தமிழ்ப்படத் தயாரிப்பா என்று எண்ணிவிடாதீர்கள்.

ஜனாதிபதியை வரவேற்க, சிமெந்துத் தொழிற்சாலை ஒதுக்கியுள்ள செலவின் சில 'துளி'கள் தான் இவை!

'ஊடுருவி'

## ரூ.60,000...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் ஜனாதிபதி நிதியிலிருந்து நஷ்டஈடாக சுமார் 60,000 ரூபா வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரடங்கிய கூட்டணியின் உயர் மட்டக்குழுவின் கோரிக்கையைத் தொடர்ந்து ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்த நிதியை ஒதுக்கியிருந்தார்.

இக்கலவரத்தின்போது 3 மோட்டார் சைக்கிள்கள், 2 சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் கராஜ் ஒன்றும், யாழ். பல்கலைக்கழகக்கட்டிடத்தின் ஒருபகுதி ஆகியனவே சேதமாக்கப் பட்டவையாகும்.

திரு. என். ரகுநாதன் ரூ: 15,000, திரு. அ. பாலகுமார் ரூ. 12,000, திரு. எஸ். தனராசா: ரூ 6,000, திரு, பஞ்சநாதன்: ரூ. 500, யாழ். பல்கலைக்கழகக்கட்டிடம் ரூ 5000, திரு டானியல் (டர்னி) ரூ. 5000.

இந்தநிதியை திரு. எம். சிவசிதம்பரம் நல்லூரிலுள்ள தனது அலுவலகத்தில்வைத்து மேறகுறிப்பிட்ட வர்களுக்கு வழங்கினர். (மா)

## கள்ளநோட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி. ஜெயக்குமார் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர், தரகர் ஒருவரை விசாரணைசெய்தபோது, குறிப்பிட்ட லொறி குளியாப்பிட்டியைச் சேர்ந்ததெனத் தெரியவந்தது.

அங்கு சென்ற பொலிசார் லொறியுடன் சாரதி, கிளினரைக் கைதுசெய்துதொடர்ந்து விசாரணை செய்தபோது, மேற்படி லொறி குருநாகலில் வைத்து வேறு ஒரு லொறிக்கு நெல்மூடைகள் மாற்றப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டி, குருநாகல், கண்டி ஆகிய பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகள், விற்பனை நிலையங்களிலும் பொலிசார் விசாரணை செய்து வருவதுடன், கொழும்பிலிருந்தும் இரகசியப் பொலிசார் கள்ளநோட்டுவிவகாரம் குறித்து விசாரணை செய்ய மட்டக்களப்பு வந்துள்ளனர்.

குருநாகலில் வைத்து நெல் மூடைகள் மாற்றப்பட்ட லொறியின் இலக்கத்தைப் பெறுவதற்கு மோட்டார் திணைக்களத்தின் உதவியைப் பொலிசார் கோரியுள்ளனர். [மா]

## வட்டுக்கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தசனிக்கிழமை நல்லூர் எம். பி. யின் அலுவலகத்தில் கூடிய தேர்தல் நியமனக் குழு, இது விஷயமாக 21-ம் திகதி (இன்று) கொழும்பில் கூடி இறுதி முடிவு செய்வதென்று தீாமானித்திருந்தது

இத்தேர்தல் நியமனக் குழுவில திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், தா. சிவசிதம்பரம, ஆர். ரி. சம்பந்தர், என். ரி. செல்லத்துரை, நொததாரிசு கந்தையா ஆகியோர் உள்ளனர்.

சுகயீனம் காரணமாக திரு. என். ரி. செல்லத்துரை இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார் எனத் தெரியவருகிறது.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக குட்டிமணியை நியமிக்க வேண்டும் என்று கூட்டணி தேர்தல் நியமனக் குழு ஏகமனதாக சிபார்சு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி சிவநாதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையதம்பி சிவநாதன் (ஓய்வுபெற்ற கூட்டுறவு வங்கி, மக்கள் வங்கி முகாமையாளர்) காலமானார். இவர் உருக்குமணியின் அன்புக் கணவரும், பங்கஜவல்லி, பிரபாகரன் (கணக்காளர், சாம்பியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சட்டத்தரணி பொன்னம்பலம் துரையப்பாவின் மாமனாரும், வசீகரன், திவாகரன், சத்தியன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 23-ம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு, 103, பாங்சால் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

4602

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] [illegible] வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப்: 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.D. 166236/81
Eelanadu — P. O. Box49 Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.